

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஆகஸ்டு 7, 2014 | புரட்சி 13 | முழக்கம் 30 | விலை: ரூ.3.00


## கழகக் கூட்டத்தைத் தடுக்க வந்த இந்து முன்னணி மிரட்டல்கள் முறியடிப்பு – பார்ப்பன பண்பாட்டுத் திணிப்பு – தமிழக மத்திய அரசுப் பணிகளில் வடவர்கள் ஆதிக்கம் பற்றி ஊர்தோறும் விளக்கம் – எழுச்சியான மாவட்ட கலந்துரையாடல்கள்

# கழகக் கூட்டங்களின் எழுச்சி

*திராவிடர் விடுதலைக் கழகம் – கோவை செயலவையில் நிறைவேற்றிய தீர்மானங்களை விளக்கிடும் பொதுக் கூட்டங்கள், தமிழகம் முழுதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**காஞ்சிபுரம் :** ஜூலை 30 ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டக் கழக சார்பில் கூடுவாஞ்சேரி அரசு பயணியர் மாளிகையில் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் மாலை




4 மணியளவில் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் சிவக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் புதிய பொறுப்பாளர்களாக தோழர்களுடன் கலந்து ஆலோசித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி கீழ்க்கண்ட தோழர்களை அறிவித்தார். மாவட்டத் தலைவர் செங்குட்டுவன், மாவட்ட செயலாளர் தினேஷ், மாவட்ட அமைப்பாளர் தெள் அமிழ்து, துணைத் தலைவர் ராஜ் குமார், துணைச் செயலாளர் பன்னீர்செல்வம் தொடர்ந்து கூடுவாஞ்சேரியில் பட்டுக்கோட்டை அழகிரி, இரட்டை மலை சீனிவாசன், காமராசர் பிறந்த நாள் விழா மற்றும் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண், கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, தமிழ்மாறன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர்.

### சென்னையில்

ஜூலை 31 ஆம் தேதி காலை 11.30 மணியளவில் இராயப்பேட்டை முருகேச நாய்க்கர் திருமண மண்டபத்தில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், செயலவைத் தலைவர், பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், மண்டல செயலாளர் அன்பு தனசேகர் மற்றும் 70க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.




தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு 8 மாத சிறைத் தண்டனைக்குப் பிறகு விடுதலையான கழகத் தோழர்கள் உமாபதி, இராவணன், மனோகரன், மாரிமுத்து ஆகியோர் கழகத்தின் அனுமதியின்றி காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி கழகத்துக்கு உடன்பாடு இல்லாத வடிவத்தில் நடத்திய போராட்டத்துக்காக தங்கள் வருத்தத்தை கடிதம் மூலம் தெரிவித்ததால் அவர்கள் மீதான தற்காலிக நீக்கம் ரத்து செய்யப்பட்டு மீண்டும் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கழகப் பொறுப்பாளர்கள் உரையைத் தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

31.7.2014 வியாழன் மாலை 6 மணியளவில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தமிழர்களின் உரிமையைப் பறிக்கும் முறைகேடான அகில இந்திய தேர்வுகளை இரத்து செய்து மாநில அளவிலான தேர்வுகளை நடத்த வலியுறுத்தி சென்னை ஓட்டேரி எஸ்.எஸ்.புரத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. புரசைவாக்கம் பகுதி பொறுப்பாளர் ந.தட்சணாமூர்த்தி தலைமை வகிக்க, ச.ஏசுகுமார், ப.முனுசாமி முன்னிலை வகித்தனர். அருள்தாசு வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடக்கமாக சம்பூகன் கலைக் குழுவின் தோழர்கள் நாத்திகன், சரவணன், நாகேந்திரன், அருள்தாசு ஆகியோர் பகுத்தறிவு சாதி ஒழிப்பு பாடல்களைப் பாடினர். தொடர்ந்து, இரா. உமாபதி, விழுப்புரம் அய்யனார், வழக்கறிஞர் துரை. அருண், பொருளார் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி ஆகியோர் பேசினர். தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர்.



(4 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

+ ஸ்காட்லாந்தில் நடக்கும் காமன் வெல்த் போட்டிக்குச் சென்ற இந்திய அதிகாரி ‘செக்ஸ்’ புகாரில் கைது. **– செய்தி**

‘காமன் வெல்த்’ நாடுகளுக்கான போட்டியை ‘காமன்’ போட்டி யாக நினைத்து விட்டார்போல.

+ சத்தீஸ்கர் மாநிலத்தில் 60 ஊராட்சி களில் இந்து மத வழிபாடுகளைத் தவிர, வேறு மத வழிபாடுகள் நடத்த அரசு தடை. **– செய்தி**

அப்பா...! ‘இந்து ராஜ்யம்’ அமைந்து விட்ட இந்த 60 ஊராட்சிகளிலும் இனி வறுமை இல்லை. வளம் கொழிக்கும் ‘தர்மம்’ செழிக்கும்னு சொல்லுங்க.

+ வகுப்புக் கலவரங்களை ஒடுக்க, 2002இல் குஜராத்தில் மோடி பின்பற்றிய நடைமுறைகளையே நாடு முழுதும் விரிவாக்க வேண்டும். **– பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் சி.ஜி. ரவி**

இஸ்லாமியர் இனப்படுகொலைக்கு ‘குஜராத் நடைமுறை’ன்னு பெயர் மாற்றம் செஞ்சுட்டீங்களா?

+ திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 1800 கிலோ தங்கம் ‘ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா’ வங்கிக் கணக்கில் டிபாசிட் செய்யப்பட்டது. **– செய்தி**

இதுக்கு பதிலா தங்கத்தை டாலராக்கி, பங்கு சந்தையில் புரள விட்டா, ஏழுமலையான் வருமானம் பெருகி, அப்படியே ஆன்மிகமும் சேர்ந்து வளருமே! சும்மா, ஒரு யோசனை தான்!

+ நான் சர்வாதிகாரியாக இருந்தால் மகாபாரதம், கீதையை, ஒன்றாம் வகுப்பிலிருந்து கட்டாயமாக கற்பிக்க உத்தரவிட்டிருப்பேன். **– உச்சநீதிமன்ற நீதிபதி அனில்தவே**

ஆமாம்; கீதையைப் படித்தால் தான் இவரது சர்வாதிகாரத்தை மக்கள் எதிர்க்காமல் வேலையை மட்டும் செய்து கொண்டு எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் அப்படியே அடிமைகளாகவே கிடப்பார்கள்!

+ வேறு மதத்திலிருந்து இந்து மதத் துக்கு வருகிறவர்கள், அவர்கள் விரும்பும் எந்த ஜாதியிலும் சேர லாம்; அதை நான் ஏற்றுக் கொள் கிறேன். **– ‘துக்ளக்’கில் ராமகோபாலன்**

அது சரி; இந்து மதத்துக்கு உள்ளே இருப்பவர்களுக்கும் விரும்புகிற ஜாதியில் சேருவதற்கு அனுமதி உண்டா? அதையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா, ‘ஜீ’!

+ டெல்லி மராட்டிய பவனில் ரம்லான் நோன்பு இருந்த முஸ்லிம் பணியாளர் வாயில் சிவசேனை நாடாளுமன்ற உறுப் பினர்கள் சப்பாத்தியைத் திணித்தனர். **– செய்தி**

இதில் என்ன ஆச்சரியம்! முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி என்ற பிரிவில் இல்லாத எல்லா மக்கள் தலைகளிலும் இதே போல்தானே இந்து மதத்தையும் திணித்தார்கள்.

**தலையங்கம்**

# சுப்ரமணியசாமிகள்!

ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் போட்டுத் தந்த துரோகப் பாதையில் வீரியத்துடன் நடைபோடுகிறது, பா.ஜ.க. ஆட்சி. அய்.நா.வால் போர்க் குற்ற விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் இலங்கை அதிபர் இராஜபக்சே, மோடியின் பதவியேற்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். கச்சத் தீவில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்க உரிமை கிடையாது என்று உச்சநீதிமன்றத்தில் ஆட்சி மனு போடுகிறது. அய்.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்களால் இலங்கை அரசின் போர்க் குற்றங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட மனித உரிமையாளர்கள் குழு இந்தியாவுக்கு வருவதற்கு ‘விசா’ வழங்க மறுத்து விட்டார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்காவுடன் இணைந்து வெளிப்படையாக செயல்படும் சுப்ரமணியசாமி என்ற பார்ப்பனர், பா.ஜ.க.வின் ‘செயல் உத்திக் குழு’ தலைவர் பதவிக்கு முடிசூட்டப்பட்டுள்ளார். பதவி கிடைத்தவுடன் இலங்கைக்குப் போய் இராஜபக்சேயையும் அவரது தம்பி, கோத்தபய இராஜபக்சேயையும் சந்தித்து இலங்கை அரசுக்கு ஆதரவாக வேகம் வேகமாக காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டார். கொழும்பிலிருந்து வெளிவரும் ‘டெய்லி மிர்ரர்’ ஆங்கில நாளேட்டில் அவரது சிறப்புப் பேட்டி ஒன்று (ஜூலை 23, 2014) வெளி வந்திருக்கிறது.

அய்.நா. மனித உரிமை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட குழுவைக் கண்டு இராஜபக்சே அஞ்சத் தேவையில்லை என்றும், அது கல்லெறிந்தால் பயந்து ஓடும் காக்கைகளைப்போல் அதிகாரம் ஏதுமில்லாத குழு என்றும் அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில் ஒப்புதல் பெறாமல், மனித உரிமை ஆணையம் எதையும் செய்துவிட முடியாது என்றும், அந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, இந்தியாவின் தேசிய நலன்களை மீறி, தமிழ்நாடு அரசு செயல்பட அனுமதிக்க மாட்டோம் என்றும், தமிழர்கள் நலனுக்காக இந்தியாவின் தேசிய நலனை தியாகம் செய்ய முடியாது என்றும் (National interests of India will not be sacrificed for that of Tamil interestgs) ஆணவமாக கூறியிருக்கிறார்.

கொழும்பிலுள்ள பண்டார நாயகா சர்வதேச ஆய்வு மய்யத்தில் ‘மோடியின் இந்தியா’ என்ற தலைப்பில் நடந்த குழு விவாதங்களில் பங்கேற்கச் சென்ற சுப்ரமணியசாமி, இந்தியாவின் முழு ஆதரவை இலங்கை பக்கம் திருப்பும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். ஆகஸ்டு மாதம் இராணுவ அதிகாரிகள் மாநாடு ஒன்றும் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் இந்திய இராணுவ அதிகாரிகளோடு சுப்ரமணியசாமியும் பங்கேற்கவிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. இந்திய-இலங்கை வர்த்தக உறவை மேம்படுத்தும் முயற்சிகள் நடப்பதாக இந்திய அரசு அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பின்புலத்தில்தான் இலங்கை இராணுவ அமைச்சகம், தமிழக முதல்வர் மீனவர் உயிர் காக்க பிரதமர் மோடிக்கு எழுதும் கடிதங்களை ‘காதல் கடிதம்’ என்று கொச்சைப்படுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக முதல்வரை இழிவுபடுத்தும் படங்களை வெளியிட்டது. வழமைக்கு மாறாக தமிழ்நாட்டில் தி.மு.க. உள்ளிட்ட அத்தனை கட்சிகளும் இயக்கங்களும் தமிழக முதல்வருக்கு எதிரான இந்த இழிவைக் கண்டித்துக் குரல் எழுப்பியிருப்பது வரவேற்கத்தக்க ஒரு வரலாற்றுத் திருப்பம். இந்த நாகரிகமான பண்பாடு தொடர வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தமிழக சட்டமன்றத் தீர்மானத்தை அலட்சியப்படுத்தி, அந்நாட்டுடன் வர்த்தகத் தொடர்பை வளர்க்க இந்திய ஆட்சி முயற்சிப்பது, வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் நடவடிக்கையே யாகும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் ஏதுமின்றி, சுப்ரமணியசாமிகள் தான்தோன்றித்தனமாக செயல்படும் உரிமையை அளித்தது யார்? தேசிய நலனுக்காக தமிழர் நலன்களை பலிகடாவாக்குவோம் என்று பேட்டி அளிக்கக்கூடிய ஆணவம் எங்கிருந்து வந்தது? இதே குரலில் - பா.ஜ.க.வின் வெளியுறவுக் கொள்கைக்கான ஆலோசகராக உள்ள சேஷாத்திரி சாரி என்ற பார்ப்பனரும் பேசி வருகிறார்.

தமிழர் நலனைப் பலியிடுவோம் என்று கொக்கரிக்கும் இந்த சுப்ரமணியசாமிதான், உ.பி. மாநிலம் கான்பூரில் 1995 இல் பார்ப்பனர் மாநாட்டைக் கூட்டி, “பிராமணர்களின் சுயமரியாதையில்தான் இந்தியாவின் சுயமரியாதையே அடங்கியிருக்கிறது” என்று பிரகடனம் செய்தார்.

1991இல் நேர்மையின் சின்னமாக செயல்பட்ட நாடாளுமன்றத் தலைவர் ரபிராய் அவர்களை ‘கைது செய்வேன்’ என்று மிரட்டியவர் சுப்ரமணியசாமி. (ரபிராய், வி.பி.சிங் ஆட்சியிலும், அவரைத் தொடர்ந்து வந்த சந்திரசேகர் ஆட்சியிலும் அவைத் தலைவராக நீடித்தவர்) அப்போது, சந்திரசேகர் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த சுப்ரமணியசாமி, கட்சி மாறும் சட்டத்தின் கீழ் தனது கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்காகவே அவைத் தலைவரை மிரட்டியவர். இதற்காக பிரதமராக இருந்த சந்திரசேகர் அவையில் அவைத் தலைவரிடம் மன்னிப்புக் கேட்டார். அதுமட்டுமல்ல, அமைச்சரவையின் ஒப்புதல் பெறாமலேயே கட்சித் தாவல் தடைச் சட்டத்தை எதிர்த்து, டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, நாடாளுமன்றத் தலைவருக்கு எதிராக தடை வாங்கியவர். சட்டத்துறை அமைச்சரானவுடன், ‘பாபர் மசூதி-இராம ஜென்ம பூமி’ மோதலுக்கு வித்திட்ட கே.எம்.பாண்டே எனும் பார்ப்பன மாவட்ட நீதிபதியை ம.பி. மாநில உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்த்தினார். ‘பாபர் மசூதிக்குள்’ 13,178 நாள்கள் பூட்டப்பட்டுக் கிடந்த ஒரு பகுதியை ஒரே நாள் விசாரணையில் வழிபாட்டுக்கு திறந்துவிட்டு, மோதலுக்கு வித்திட்டவர்தான், இந்த பாண்டே.

இராஜிவ் காந்தி ‘ஆசி’யுடன் பதவிக்கு வந்த சந்திரசேகர் ஆட்சி, இராஜிவ் காந்திக்கு நன்றி காட்ட அவர் மீதான போபோர்ஸ் ஊழல் வழக்கைக் குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் இந்த ‘சீர்குலைப்பு’க்கு அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியவர் சுப்ரமணியசாமி. தன்னால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞரையே - சி.பி.அய்க்கு எதிராக வாதாட வைத்தவர். இதைக் கண்டு நீதிமன்றத்தில் கொதித்துப் போன சி.பி.அய். இணை இயக்குனராக இருந்த அதிகாரி மாதவன், நீதிமன்றத்திலேயே ஒரு அதிகாரி வழக்கறிஞராக நின்று வாதாடிய அதிசயம் நடந்தது. தில்லை தீட்சதப் பார்ப்பனர்கள் வழக்கு என்றாலும், காஞ்சி சங்கராச்சாரி கொலை வழக்கு என்றாலும், பார்ப்பனர்களுக்காக களத்தில் வந்து நிற்கக்கூடியவர், சுப்ரமணியசாமி!

பார்ப்பன ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியாக வலம் வரும் இந்த பார்ப்பன சக்திகள், தமிழர்களின் இனப் பகைவர்களாகவே தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இந்திய ஆட்சி அதிகாரம் பார்ப்பனர்களின் பிடியில் இருக்கும் வரை தமிழினத்தை ஆபத்துகள் சூழ்ந்தே நிற்கும் என்ற உண்மையை தமிழர்கள் புரிந்து பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுப்பது அவசியம்!

# அகமணமுறை எதிர்ப்பு பரப்புரைக்கு மக்கள் பேராதரவு



அகமணமுறையை எதிர்ப்போம்; ஆரோக்கிய சமுதாயம் படைப்போம் என்ற முழக்கத்தை முன் வைத்து கழகத் தோழர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் பரப்புரை நடத்தினர்.

கழகத்தினரின் அறிவியல் விளக்கவுரைக்கு ஆதரவாக, நடமாடும் சாட்சி களாக அந்தந்த ஊர்களிலேயே பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், ஆண் களையும் அந்தந்த ஊர் மக்களே நமக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். ஜாதி ஆதிக்க வெறி கொண்ட கிராமங்களில்கூட, ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு ஆதரவான இந்தக் கலைநிகழ்ச்சிகளையும், உரைகளையும் ஆர்வமுடன் கேட்டு, நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று தமது ஆதரவுகளைத் தெரிவித்தனர்.

நமது நிகழ்ச்சிகளைக் கண்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் கண்ணீர் விடும் நெகிழ்ச்சியான நிகழ்வுகள் தொடர்ந்து நடந்தன. நிகழ்ச்சி முடிந்த உடன் கிராமப்பெண்கள் நமது தோழர்களைப் பார்த்து “வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்” என அழைப்பது வாடிக்கையாக இருந்தது. சில ஊர்களில் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களில் சிலர் தோழர்களுக்கு குளிர்பானங்களையும், தேநீரையும் மகிழ்வுடன் வாங்கிக்கொடுத்துச் சென்றனர். பரப்புரையைக் கண்ட மக்களில் சிலர், எங்கள் ஊரிலும் வந்து இந்த நிகழ்ச்சியை நடத்துங்கள் என அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்புகளின் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டத்தில் மேலும் 5 நாட்கள் பரப்புரையை தொடர்ந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# பவானி சாயத் தொழிற்சாலை தொழிலாளர்கள் போராட்டம்



கோபி அருகே அக்கரைக்கொடிவேரியில் செயல்பட்டுவரும் பவானி டெக்ஸ்டைல்ஸ் (BRTகுருப்ஸ்) சாய தொழிற்சாலையில் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 160 தொழிலாளர்கள் நிரந்தர தொழிலாளர்களாகவும் மற்றவர்கள் தினக்கூலி அடிப்படையிலும் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மாதம் மாதம் கொடுக்க வேண்டிய சம்பளத்தை தொழிலாளர் ஒப்பந்தப்படி ஒவ்வொரு மாதமும் 7-ந்தேதி கொடுப்பதற்கு பதிலாக 20-ந் தேதிக்கு மேலாக கொடுப்பதாகவும், 2011-ம் ஆண்டு ஏற்பட்ட 12(3) ஒப்பந்தத்தின்படி பிரதி மாதம் 7-ம் தேதி சம்பளம் கொடுக்க வேண்டும் எனவும், நிரந்தரத் தொழிலாளர்களை குறைக்கும் எண்ணத்தில் வீண்பழி சுமத்தி நிரந்தர பணிநீக்கம் செய்வதைக் கண்டித்தும், தொழிற்சங்க செயலாளரை பணிநீக்கம் செய்ததை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்றும் பத்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த உள்ளூர் தொழிலாளர்களை உடனடியாக பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்பது தொழிற்சாலையில் இயங்கும் இயந்திரத்தில் ஆள் குறைப்பு செய்வதை கண்டித்தும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய ஓவர் டைம் கூலியை உடனே வழங்க வேண்டும் உட்பட ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சாலையின் வாயில் முன் அமர்ந்து ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் உண்ணாவிரத போராட்டம் ஸ்ரீ பவானி டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர் கூட்டுக் குழுவின் சார்பாக நடைபெற்றது. இதில் பெரியார் தொழிலாளர் கழகம் AITUC தொழிற்சங்கம் MLF தொழிற்சங்கம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தினை மாலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் ஆகியோர் முடித்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். கழகத் தலைவர் பேசும்போது இப்போராட்டத்தில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் இன்றைய காலக்கட்டத்தில் எளிமையானதும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நிறைவேற்ற ஒத்துக்கொண்ட கோரிக்கைகள்தான். ஒரு ஆலையின் தொழிலாளி வேலை நிறுத்தம் அறிவித்த உடனே நிர்வாகம் அவரை அழைத்துப் பேசி அவரின் பிரச்சனையை முடித்து வைக்க வேண்டும். இன்று கள்ளச்சாராயம் காய்ச்சி விற்றுக் கொண்டு இருந்தவர்கள் தான் கல்வி நிலையம் ஆரம்பித்து கொள்ளையடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் போல்தான் இன்று உலக பொருளாதார மயமாக்கலில் தொழிற்சாலை ஆரம்பிக்க அத்தொழிலை பற்றி தெரியாத நபர்கள் தொழிற்சாலையை ஆரம்பித்து தொழிலாளர் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இவ்வகையான போராட்டத்திற்கு தூண்டுகிறார்கள். வெளிநாட்டில் இருந்து வரும் முதலாளிகள் ஆரம்பிக்கும் தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர் நலச்சட்டம் அமுல்படுத்துவதில்லை. அங்கே தொழிலாளர்களின் உரிமை மறுக்கப்படுகிறது. இம்மாதிரி நடந்துக் கொள்பவர்கள் சட்டவிரோதமாக தொழில் செய்து பணம் சம்பாதிக்கும் எண்ணம் உடையவர்களாக தான் இருப்பார்கள் என்றார். வழக்குரைஞர்

(4 ஆம் பக்கம்)

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (5)

# இந்தி எதிர்ப்பு ஒரே நாளில் முடிவெடுத்தது அல்ல!

***இந்தி எதிர்ப்பைத் தொடங்கியது தமிழ் அறிஞர்கள். பெரியார் பிறகு வந்து இணைந்து கொண்டார் என்று பெ.மணியரசன் எழுதியது சரியா?***

*1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் என்பதை ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்தியது. அது 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்தது. அச்சட்டத்தின் அடிப்படையில் நடந்த தேர்தலில் சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு பெரும்பான்மைப் பெற்றது. 1935 ஆம் ஆண்டு சட்டத்தில் ஆளுநர்களுக்கு சட்டமன்ற தீர்மானங்களை நீக்கறவு (இரத்து) செய்தல், நெருக்கடி காலச் சட்டங்களைப் பயன்படுத்துதல் முதலிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. (இவ்வதிகாரங்கள் இப்போது குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளன) ‘மேற்கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டேன்’ என்று ஆளுநர் உறுதிமொழி வழங்கினால் மட்டுமே பதவி ஏற்பேன் என்று இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி)யும், அவரது அமைச்சர்களும் வீராப்பு பேசி வந்தார்கள். அத்தகைய உறுதி மொழி வழங்க ஆளுநர் உடன்பட வில்லை. ஓரிரு மாதங்கள் மட்டும் காங்கிரசு பொறுத்துப் பார்த்தது. பின்னர் தாங்களாகவே ஜூலை மாதம் பதவி ஏற்றுக் கொண்டனர். அவ்வமைச்சரவையைப் பெரியார் “சரணாகதி மந்திரிசபை” என்றழைத்து வந்தார்.*

*அமைச்சர்கள், சட்டப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர் ஆகிய பத்துப் பதவிகளில் ஆறு பார்ப்பனர்கள். (சட்டமன்றத் துணைத் தலைவரும் ருக்குமணி இலட்சுமிபதி என்கிற பார்ப்பனப் பெண்மணியே).*

*அமைச்சரவை அமைக்கப்பட்ட முறையே பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாக அமைந்தது. இதை சுயமரியாதை இயக்கத்துக்கு முன்னதாகவே சுட்டிக்காட்டியவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிப் பொதுச் செயலாளர் சேலம் பாரிஸ்டர் எஸ்.வி.இராமசாமியே ஆவார். (இவரது துணைவியார்தான் சேலம் சாரதா கல்வி நிறுவனங்களின் நிறுவனர் ஆவார்) இவர் பின்னாளில் 1960களில் இரயில்வேத் துறை இணை அமைச்சராக இருந்த போது, திருச்செந்தூர் கோவிலில் கும்பிட்டுவிட்டு திருநீறு கேட்டபோது, சூத்திரனுக்கு கையில் கொடுக்க முடியாது என்று பார்ப்பன அர்ச்சகர் கல்தூண் மீது போட்டார். கேள்விப்பட்ட பெரியாரும், அவரியக்கமும்தான் தமிழ்நாடு முழுதும் கூட்டங்கள் நடத்தி கண்டித்தன. அதே கோவிலுக்கு முதல் தி.மு.க. அரசின் அறநிலையத் துறை அமைச்சரான நாவலர் நெடுஞ்செழியன் பார்வையிடச் சென்றபோது பார்ப்பன அர்ச்சகர் பவ்வியமாக திருநீறு கொடுக்க, அதை நாவலர் கல்தூண் மீது போட்டு வந்தார். காங்கிரசிலும் தன்மான முள்ளவர்கள் இருந்தார்கள் என்பதையும், அது ஆட்சி மாற்றம், பார்ப்பனர்களின் போக்கில் ஏற்படுத்திய மாற்றத்தையும் வெளிப்படுத்தும் சுவையான நிகழ்வாகும்.*

*அவ்வாறு பதவியேற்ற இராஜாஜி, ஏற்கெனவே நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் கிராமப்புறங்களில் ஏற்படுத்தியிருந்த 2200 பள்ளிகளை நிதிப்பற்றாக் குறையைக் காரணமாகக் காட்டி மூடினார். ஆனால், 12 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கி (இன்றைய மதிப்பில் பல கோடி ரூபாய்) வேத பாடசாலைகள் நிறுவி, பார்ப்பன ஆசிரியர்களுக்கு கொழுத்த சம்பளம் வழங்கினார். இதே இராஜாஜி 1952 இல் அடுத்த முறை முதலமைச்சரானபோது, நிதி நெருக்கடிக் காரணம் காட்டி 6000 கிராமப்புற பள்ளிகளை மூடினார்.*

*இதற்கெல்லாம் உச்சமாக, இராஜாஜி பதவியேற்ற ஒரு மாதத்தில், 10.8.1937 அன்று சென்னை இராமகிருஷ்ணா மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், எல்லா மாணவருக்கும் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக அமைக்கப் போவதாக அறிவித்தார். அடுத்தத் திங்கள், கிறித்துவக் கல்லூரியில் பேசுகையில் எல்லாப் பள்ளிகளிலும் - ஆனால் முதல் மூன்று பாரங்களில் மட்டும் என்றார்.*

*அடுத்த கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக 21.4.1938 அன்று இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் ஆணையைப் பிறப்பித்தார்.*

*பள்ளிகள் தொடங்கியவுடன் போராட்டமும் தொடங்கியது.*

*ஆனால் 21.4.1938இல் இராஜாஜி பிறப்பித்த இந்திக் கட்டாய ஆணையில் தமிழகத்தில் 60, ஆந்திராவில் 54, கன்னட நாட்டில் 4, மலையாளத்தில் 7 ஆக 125 பள்ளிகளில் மட்டுமே முதல் மூன்று படிவங்களில் (6ஆம் வகுப்பு, முதல் பாரம்) இந்தியைப் புகுத்தினார்.*

### ‘கண்டதைப் படிப்பவன்’

*அடுத்த திங்கள், இந்தியில் தேறாவிட்டாலும் பரவாயில்லை - மாணவர்கள் மேல் வகுப்புக்கு மாற்றப்படுவார்கள் என்றார்.*

*அதற்கடுத்த திங்கள், இந்தியில் ஒரு நூறு சொற்கள் தெரிந்தால் போதும், மற்றபடி நான் முழு இந்தியைப் படிக்கச் சொல்லவில்லையே என்றார்.*

*மற்றும் ஒரு முறை, இன்றைக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதே பிரச்சினை அல்ல. ஆள்வது நானா அல்லது ஒரு ஈரோடு இராமசாமியா என்பதுதான் பிரச்சினை என்றார்.*

*இன்னொரு முறை, இன்றைய பிரச்சினையெல்லாம் இந்த நாட்டுக் கல்வி முறையை உருவாக்கும் உரிமை எனக்கிருக்கிறதா அல்லது எனது நண்பர் இராமசாமி நாயக்கருக்கிருக்கிறதா? என்பதுதான் என்றார்.*

*இந்திக் கிளர்ச்சியின் துவக்கக் காலத்தில் இராஜாஜி, “இந்தியை யார் எதிர்க்கிறார்கள்? ஒரு இராமசாமியும் ஒரு சோம சுந்தர பாரதியும் தானே! இராமசாமியோ பார்ப்பனத் துவேஷி; பாரதியோ பண்டிதர். ஒரு பார்ப்பன துவேஷியும் ஒரு பண்டிதரும் எதிர்ப்பதற்கா நான் இந்தியை விட்டுவிடுவது” என்றார். ஆனால் அந்த ஆச்சாரியார், இந்திப் போரின் இறுதிக் கட்டத்தில், “புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் இந்தி எதிர்ப்புப் போர் வீரர்கள் வருகிறார்களே! இந்த இந்தி சனியனுக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்திருந்தால் இந்தியை வைத்திருக்கவே மாட்டேன்” என்றார்.*

*“திடீரென்று என் வீட்டில் திருடர்கள் புகுந்து விட்டால் வீட்டில் கையில் கிடைத்த எந்த ஆயுதத்தையும் கொண்டு அவர்களை நான் தாக்குவேன். அதுதான் நியாயமும்கூட. அதுபோல்தான் இந்தி எதிர்ப்புப் பற்றிய என்னுடைய அடக்குமுறையும்” என்று பின்னொருமுறை கூறினார்.*

*தமிழ்க் கிளர்ச்சியின் வேகம் அவரை அப்படியெல்லாம் மாறி மாறிச் சொல்ல வைத்தது; அடக்குமுறையையும் வலுக்க வைத்தது. ஆனால் அவருடைய அடக்குமுறையால் கிளர்ச்சியின் வேகம் சிறிதும் தணியவில்லை. அடக்க அடக்க மேலும் மேலும் வீறு பட்டு எழுந்தது கிளர்ச்சி; வீறுபெற்று எழுந்தனர் தமிழர்.*

*3.6.1938 அன்று இந்தி எதிர்ப்புப் போரின் முதல் சர்வாதிகாரி செ.தெ.நாயகம், சண்முகானந்த அடிகள், பட்டினிப் போராட்டம் நடத்தி வந்த பல்லடம் பொன்னுச்சாமி ஆகிய மூவரின் கைதில் தொடங்கியது. ஆண், பெண், குழந்தைகள் என 1271 பேர் கைதாகினர். தொடர்ந்து ஓராண்டுக்கு மேலாக நடந்து வந்தது இந்தி எதிர்ப்புத் தொடர் போர். 21.2.1940இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் கட்டாய இந்திப் பாடத் திட்டம் திரும்பப் பெற்றதும் முடிவுக்கு வந்தது.*

*இந்தி வந்ததும், எதிர்த்ததும் ஒரே நாளில் முடிவெடுத்து நடந்ததல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.*

*1906 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியாவின் பொது மொழியாக இந்தி அல்லது இந்துஸ்தானி இருக்க வேண்டும் என்று பேசப்பட்டு வந்தாலும், காந்தியின் தலைமை வந்த பின்னரே அது தீவிரமாயிற்று.*

*1917 ஆம் ஆண்டு இன்றைய குஜராத் மாநிலம், பரோச் என்ற இடத்தில் நடந்த கல்வி மாநாட்டில் காந்தி இந்தியாவில் பொது மொழி குறித்து அழுத்தமாக பதிவு செய்ததும், தென்னாட்டில் எதிர்க்குரலும் உடனே வெளிப்பட்டது. நீதிக் கட்சியின் நாளேடான ‘திராவிடன்’ இதழில் 1.8.1917 அன்று ‘மிஸ்டர் காந்தியும், இந்தியும்’ என்ற இந்தி எதிர்ப்புக் கட்டுரை வெளி வந்தது.*

*அனைத்திந்திய காங்கிரசு மாநாடுகளில் விவாதங்கள் இந்தி/இந்துஸ்தானியில் காந்தியாரின் விருப்பப்படி நடக்கத் தொடங்கின. சென்னை மாகாணப் பிரதிநிதிகள் எதிர்ப்பும் தொடர்ந்து நிலவியது. காந்தியும், தென்னிந்தியப் பிரதிநிதிகள் இந்தியைக் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்திய வண்ணமாக இருந்துள்ளார்.*

*அதன் தொடர்ச்சியாக 1918 இல் இந்தூரில் நடைபெற்ற இந்தி சாகித்திய சம்மேளன மாநாட்டில் தென்னிந்தியாவில் இந்தியைப் பரப்புவதற்கான செயல் திட்டங்களை காந்தி உருவாக்கினார்.*

*அதன் விளைவாக 1918 இல் சென்னையில் ‘தட்சிண பாரத ஹிந்தி பிரச்சார சபை’ (தென்னிந்திய இந்தி பரப்பு அவை)யை நிறுவினார். அதோடு விட்டாரா காந்தி? திராவிட மொழியினர் சிறுபான்மையினர்; எனவே பெரும்பான்மையினர் மொழியைக் கற்றுத்தானாக வேண்டும் என்ற பாசிச வாதத்தை இனிப்புத் தடவி பேசத் தொடங்கினார். “திராவிடர்கள் சிறுபான்மையோராக இருப்பதால், இந்தியாவின் பிற பகுதியில் உள்ளவர்கள், திராவிட இந்தியாவில் உள்ளவர்களுடன் பேசுவதற்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதைவிட இந்தியாவின் பிற பகுதிகளில் பொது மொழியாக உள்ள இந்தியை சிறுபான்மையினரான திராவிடாகள் கற்றுக் கொள்வதுதான் தேசியப் பொருளாதாரத்துக்கு நல்லது” என்று ‘யங் இந்தியா’வில் எழுதினார்.*

*காந்தி மீதும், காந்தியார் பேசி வந்த நிர்மாணத் திட்டத்தின் மீதும் முழு நம்பிக்கை வைத்து காங்கிரசில் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார் பெரியார். மதுவிலக்கை மனதில் கொண்டு, கள் தரும் மரங்களை வெட்டி எறியுங்கள் என்றார் காந்தி. வட இந்தியாவில் கள் தருவது ஈச்ச மரம்தான்; எனவே வெட்டினார்கள். ஆனால், பெரியாரோ பொருள் மதிப்பு மிக்க 500 தென்னை மரங்களை வெட்டித் தள்ளினார்.*

*“ஆங்கிலேயே அரசு நீதியற்ற அரசு; அதன் நீதிமன்றங்களைப் புறக்கணியுங்கள்” என்றார் காந்தி. 1920களில் தனக்கு வரவேண்டியிருந்த ரூ.50000/க்கான இரண்டு கடன் பத்திரங்கள் காலாவதி ஆவதை அறிந்தும், பலர் வற்புறுத்தியும் நீதிமன்றம் செல்லாமல் இழந்தார் பெரியார்.*

*அதே கதைதான் இந்தி விஷயத்திலும்.*

*“தேசிய நலனுக்கு இந்தி படியுங்கள்” என்று கூறி விட்டார் காந்தி. அது போதாதா பெரியாருக்கு! 1922 ஆம் ஆண்டு பண்டித மோதிலால் நேரு, விட்டல்பாய் படேல், டாக்டர் அன்சாரி ஆகியோர் ஈரோட்டுக்கு வந்திருந்தபோது, தனது பழைய இரயில்வே நிலைய மாளிகையில், 30 மாணவர் கற்கும் இந்திப் பள்ளி ஒன்றினைத் தமது செலவில் தொடங்கி, 2 ஆண்டுகள் வரை நடத்தி வந்தார். அதில் 15 பிள்ளைகளுக்கு உணவு முதலியவை இவர் பொறுப்பு. (திரு.வி.க. வாழ்க்கை வரலாறு)*

*ஆனாலும், அதே 1922 ஆம் ஆண்டின் இறுதியில் திருப்பூரில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரசு மாநாட்டில் இந்தியைப் பரப்புகிறோம் என்று கூறிக் கொண்டு, இந்தியில் உள்ள துளசிதாஸ், இராமாயணத்தைப் பரப்புவதைக் கண்டித்துப் பேசுகிறார், பெரியார். ஆக இந்தி என்பதன் ஊடாக வடவரின் பண்பாட்டுத் திணிப்பு நடக்கிறது என்ற சிறு பொறி பெரியார் மனதில் 1922 லேயே தோன்றியிருக்கிறது.*

*1925 நவம்பரில் தமிழ்நாடு காங்கிரசு மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. தலைமை திரு.வி.க. இந்த மாநாட்டில்தான் பெரியார் கட்சி விதிகளின்படி தேவையான அளவுக்கு மேல் கட்சிப் பிரதிநிதிகளின் ஒப்புதலோடு முன் வைத்த வகுப்புவாரித் தீர்மானத்தைப் பரிசீலனைக்குக்கூட எடுத்துக் கொள்ளப்படாமல் தள்ளுபடி செய்தார் தலைவர் திரு.வி.க., தமிழ்த் தென்றல் திரு.வி.க., மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் ஒரு தீர்மானத்தை முன் வைத்தார். பெரியாரும் அவரோடு பலரும் மாநாட்டுப் பந்தலை விட்டு வெளியேறிய பின்னர், அ ந்தத் தமிழறிஞர் முன்மொழிந்த தீர்மானம் இந்தி பரப்புக்கான தீர்மானம்.*

*“தமிழக இளைஞர்கள் இந்தி சேவாதளத்தில் இணைய வேண்டுமென்றும், சேவா தளத்தின் கிளைகள் ஒவ்வொரு நகரத்திலும், தாலுகாக்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும், இந்தியைப் பரப்புவதில் ஆர்வம் குறைந்துள்ளது; அதை மாற்றி தமிழர்கள் இந்தியை விரைவாகவும், நன்றாகவும் பயில வேண்டும் என்றும் வலியுறுத்துவதே தமிழ்த் தென்றல் திரு.வி.க. கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம்.*

*(தொடரும்)*

DATE OF PUBLICATION 06.08.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# முதல்வரை அவமதிக்கும் இலங்கையுடன் தூதரக உறவை துண்டித்திடுக!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஏ. விஜயன் நன்றி கூறினார். தலைமை நிலைய செயலாளர் தபசி. குமரன் பங்கேற்றனர்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர்கள் சிலர் கூட்டத்தை நிறுத்தக் கோரி கூச்சலிட்டனர். கூச்சலிட்ட கும்பலை காவல்துறையினர் விரட்டினர். எந்தவித சலனத்துக்கும் அஞ்சாமல் கூட்டம் 10 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது.

### வேலூரில்

ஆகஸ்டு முதல் தேதி வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தமிழின உரிமை மீட்பு விளக்கப் பொதுக் கூட்டம் ஏ.டி.ஜி. கவுதமன் தலைமையில் நடைபெற்றது.



காஞ்சி மக்கள் மன்றத்தின் கலை நிகழ்ச்சிகளோடு கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் மற்றும் தோழமை அமைப்புத் தோழர்கள் சா.குப்பன், சிங்கராயர், கன்.மோகன், சு.விசுவநாதன், ச.ந.ச. மார்த்தாண்டன் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட தலைவர் திலீபன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தார்.

### கிருட்டிணகிரி

கிருட்டிணகிரி, தர்மபுரி மாவட்டங்களின் கழகக் கலந்துரையாடல் கூட்டம் ஆகஸ்டு 2 ஆம் தேதி இராயக்கோட்டை எஸ்.எம். திருமண மண்டபத்தில் காலை



11 மணியளவில் நடைபெற்றது. 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், செயலவைத் தலைவர், பரப்புரை செயலாளர், மண்டல அமைப்புச் செயலாளர் அ.சக்திவேல் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களாக தோழர்களுடன் கலந்து ஆலோசித்து, கீழ்க்கண்ட தோழர்களை கழகத் தலைவர் அறிவித்தார். மாவட்டத் தலைவர் தி.குமார், மாவட்ட செயலாளர் கா.குமார், மாவட்ட அமைப்பாளர் பழனி, மாவட்ட துணைத் தலைவர் கிருட்டிணன், மாவட்ட துணைச் செயலாளர் வாஞ்சிநாதன், பொருளாளர் மைனர் என்கிற வெங்கட கிரியப்பா, கொலமங்களம் ஒன்றிய பொறுப்பாளர் சங்கர், தேன்கனிக் கோட்டை அமைப் பாளர் அனுமந்தப்பா. கூட்டத்தில், தமிழக முதல்வரை இழிவுபடுத்தி இணைய தளத்தில் படமும் கட்டுரையும் வெளியிட்ட சிறீலங்கா அரசுடனான தூதரக தொடர்பை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், இராஜபக்சேவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வரும் பா.ஜ.க. ஆலோசனைக் குழு தலைவர் சுப்ரமணியசாமி மற்றும் வெளியுறவுத் துறைக்கான ஆலோசகர் சேஷாத்திரி சாரி ஆகியோரைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர்கள் அனைவருக்கும் மாவட்டக் கழகத் தோழர்கள் மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தனர்.

மாலை 5 மணியளவில் இராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகே மாபெரும் பொதுக் கூட்டம், மாவட்ட அமைப்பாளர் பழனி தலைமையில் நடைபெற்றது. காஞ்சி மக்கள் மன்றம் கலை நிகழ்ச்சிகளுடன் நடந்த பொதுக் கூட்டத்தில் தி.குமார், மாநில பொறுப்பாளர்கள் ஈரோடு இரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, பால்.பிரபாகரன், விடுதலை இராசேந்திரன், கொளத்தூர் மணி, தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம் சார்பில் தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.

பொதுக் கூட்டத்தில் நாட்டில் கனிம வளங்களை சூறையாடும் பன்னாடு நிறுவனங்கள், சுற்றுச் சூழல் ஆபத்துகளை மக்கள் மீது திணிக்கும் அணுஉலைக் கூடங்கள், மக்களுக்கு எதிரான அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விளக்கி, தோழர்கள் பேசினர். கழகத் தோழர் பழனி, கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன், ‘கிரானைட்’ எடுக்கும் நிறுவனங்களை நடத்தி, அதனால் அரசுக்கு ஏற்படுத்திய வருவாய் இழப்புகளை ஆதாரங்களுடன் கழகத் தலைவர் அம்பலப்படுத்தினார். இரவு 9 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. (உரை அடுத்த இதழில்)

# ஈரோடு மண்டல கழகப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு

திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு மண்டல கழக பொறுப்பாளர்களுக்கான முதல் நிலை பயிற்சி வகுப்பு கடந்த 26.07.2014, 27.07.2014 சனி ஞாயிறு ஆகிய இரு நாட்கள் அத்தாணியில் உள்ள ஜெ.பி.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஈரோடு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட ஒன்றிய, நகர கிளை பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். 26.07.2014 அன்று தோழர்களின் வருகை காரணமாக காலதாமதமாக வகுப்பு தொடங்கியது. முதல் வகுப்பாக கழக அமைப்பு செயலாளர் தி. தாமரைக் கண்ணன் வேத எதிர்ப்பு அமைப்புகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் என்கின்ற தலைப்பில் வகுப்புகளை நடத்தினார். வேத எதிர்ப்பு அமைப்புகள் எப்பொழுது உருவாகியது அதன் பின்னணி, அவை எவ்வாறு வீழ்ச்சியடைந்தது? அதன் வீழ்ச்சிக்கு காரணம் என்ன? இந்நூற்றாண்டில் வேத எதிர்ப்பு அமைப்புகள் எவை? அது எழுச்சியாக இருக்க செய்ய வேண்டிய செயல்கள் உள்ளிட்ட அனைத்தையும் விளக்கி வகுப்புகளை எடுத்தார். தோழர்கள் அனைவருக்கும் இவ்வகுப்பில் எடுக்கப்பட்ட பாடங்கள் அனைத்தும் புதிய செய்தியாக இருந்ததால் அனைவரும் கவனமாக கேட்டு குறிப்புகள் எடுத்து கொண்டனர். உணவு இடைவேளைக்கு பின்னரும் தாமரைகண்ணனின் வகுப்பு தொடர்ந்து நடந்தது. மாலை தேனீர் இடைவேளைக்கு பின்னர் புரட்சிக் கொடி, பாலின பாகுபாடுகள் மற்றும் பாலின சமத்துவத்தை பற்றி வகுப்புகள் நடத்தினார். நம் சமுதாயத்தில் எவ்வாறு பாலினப் பாகுபாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. எந்தெந்த வகையில் பெண்ணடிமை தோன்றுகிறது. அதற்கு ஊடகங்களின் பங்கு ஆகியன பற்றி எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் வகுப்புகளை எடுத்தார். மேலும் பாலின பாகுப்பாடுகளை களைய முதலில் பெரியார் தொண்டர்கள் தனது இல்லத்தில் எவ்வாறு பாலின சமத்துவத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், பிறகு இச்சமுதாயத்தில் பாலின சமத்துவத்தை உருவாக்க முயற்சி எடுக்கவேண்டும் என்றும் வகுப்புகளை எடுத்தார். பிறகு காலையில் இருந்து நடந்த வகுப்புகளை பற்றிய கேள்வி-பதில் நிகழ்வு நடைபெற்றது. முதல் நாள் வகுப்பு இரவு 9.30 வரை நடைபெற்றது.

இரண்டாம் நாள் வகுப்பு 27.07.2014 அதாவது காலை 9 மணிக்கு துவங்கியது. முதல் வகுப்பாக மாநில பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் சமுதாயத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் குறித்து வகுப்புகளை நடத்தினார். இச்சமுதாயத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்குமுன் நிகழ்ந்த கொடுமைகளையும், சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட நன்மைகளையும் விளக்கி வகுப்புகளை எடுத்தார். தேனீர் இடை வேளைக்கு பின் மூத்த பெரியாரின் தொண்டர் சதாசிவம் பெரியார் காலத்தில் நடந்த பயிற்சி வகுப்புகளைப் பற்றி தொகுத்து வழங்கினார். அதன் பின் ஜவகர், பொதுவுடமை, பொதுவுரிமை என்கின்ற தலைப்பில் வகுப்புகளை நடத்தினார். பெரியாரின் பர்வையில் பொதுவுடமை என்பது பொதுவுரிமை என்பதன் நோக்கம் என்று பற்றி விளக்கி வகுப்புகளை நடத்தினார். இன்றைய காலகட்டத்தில் இச்சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை தீர்க்க பெரியாரின் கொள்கைகள் தான் உதவும் என்று சுட்டிக் காட்டினார். அதன் பின்னர் தாமரைக்கண்ணன், நமது கடமை என்கிற தலைப்பில், தோழர்கள் நமது கழகத்தின் சிறப்பாக கட்டமைக்க நாம் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி உரையாற்றினார். மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் பூங்குழலி, ஜாதி: தோற்றமும் வளர்ச்சியும் என்கின்ற தலைப்பில் வகுப்புகளை நடத்தினார். பூங்குழலி, வகுப்பு ஆரம்பிக்கும் முன் தோழர்கள் அனைவரும் சுறுசுறுப்பாக இருக்க சிறு விளையாட்டுகளை நடத்தி பின்னர் வகுப்புகளை துவக்கினார். பூங்குழலி, ஜாதி எவ்வாறு தோன்றியது அதன் படிநிலை வளர்ச்சி எவ்வாறு நடந்தது? ஜாதி இக்காலகட்டத்தில் எவ்வாறு வேரூன்றியுள்ளது என்று குறித்து வகுப்புகளை நடத்தினார்.

இப்பயிற்சி வகுப்பில் ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு, நாமக்கல், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். பயிற்சி வகுப்பிற்கான ஏற்பாடுகளை ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன் முன்னின்று ஏற்பாடு செய்தார்.

**செய்தி - நிவாஸ்**

---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)


ப.பா.மோகன் உரையாற்றிய போது 1886-ம் ஆண்டு சிகாகோ தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை உரிமைக்காக போராடியபோது நடந்த துப்பாக்கி சூட்டின் மூலம் ஓடிய ரத்த ஆறுதான் இன்றைய மேதினம். 1981-ம் ஆண்டு சட்டத்தின்படி ஒரு தொழிற்சாலையில் 50 பேருக்கு மேல் வேலைக்கு சென்றால் அவர்கள் 2 ஆண்டுகளில் 480 மணி நேரம் வேலை செய்தால் போதும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது. ஒரு நிறுவனத்தில் இழப்பு வந்தாலும் லாபம் வந்தாலும் அவர்களுக்கு 8.33சதவீதம் போனஸ் கொடுக்கப்பட வேண்டும். இது உழைப்பவர்களின் அடிப்படை உரிமைகளாகும். இத் தொழிற்சாலை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தப்போது பெரும் இழப்பு ஏற்பட்டு இத் தொழிற்சாலை மூட வேண்டிய சூழ்நிலை உருவான போதும் தொழிலாளர்கள் தங்களுடைய பல உரிமைகளை விட்டுக் கொடுத்து இத்தொழிற்சாலை மூடப்படக்கூடாது காக்கப்பட வேண்டும் என்று நினைத்து குறைந்த ஊதியத்தில் அதிக நேரம் வேலை செய்தனர். ஆனால் அதனை நிர்வாகம் இன்று காலில் மிதித்து தொழிலார்களை நசுக்கப் பார்க்கிறது. இக்கோரிக்கைகள் குறித்து இந்நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கவில்லை என்றால் இப்போராட்டம் வெடிக்கும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் பெரியார் தொழலாளர்கள் கழகம், AITUC, MLF, திராவிடர் விடுதலைக் கழகம், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தோழர்கள் ஜெயக்குமார், பொங்கியண்ணன், ராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம் முன்னின்று செய்திருந்தனர்.

**செய்தி - நிவாஸ்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 7th August 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஆகஸ்டு 14, 2014 | புரட்சி 13 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையிலிருந்து கூண்டோடு வெளியேற்றம். **– செய்தி**

சட்டசபைக்குள் இவர்கள் கூண்டுக்குள்தான் வைக்கப்பட்டிருந்தார்களா, சொல்லவேயில்லை!

+ மோடி அலையால்தான் பா.ஜ.க. வெற்றி என்று பா.ஜ.க. கூறுவது தவறு. மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பியதால் தான் பா.ஜ.க. வெற்றி பெற்றது. **– ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்**

ஆக, பா.ஜ.க.வின் ‘இந்துத்துவா’ கொள்கையை ஏற்று, மக்கள் வெற்றி பெற வைக்கவில்லை என்ற உண்மையை, இரண்டு பேருமே ஒப்புக் கொள்றீங்க!

+ உச்சநீதிமன்ற தீர்ப்பையேற்று, 900 ஆண்டு பாரம்பர்யம் கொண்ட மகாராஷ்டிரா மாநிலம் பண்டரிபுரம் கோயிலில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இரண்டு பெண்களை அர்ச்சகர்களாக நியமித்தது கோயில் நிர்வாகம். **– செய்தி**

அனைத்துக் கோயில்களும் பண்டரிபுரங்களாக மாறட்டும் என வாழ்த்துவோம்!

+ ஈரோடு மாவட்டம் அந்தியூர் தேர்த் திருவிழாவை யொட்டி மாவட்ட நிர்வாகம், விழாப் பகுதியில் தற்காலிக டாஸ்மாக் கடை திறப்பு. **– ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ செய்தி**

அதுல என்னங்க தப்பு? பகவான் பவனி வரும் தேர் தள்ளாடி விழாம, இழுக்கனும்ல!

+ ஆகஸ்ட் 10 ஆவணி அவிட்டம்; இந்தியா முழுதும் ‘பிராமணர்கள்’ காயத்ரி மந்திரம் ஓதி, புதுப் பூணூல்களை மாற்றிக் கொண்டனர். **– செய்தி**

‘சமஸ்கிருத’ விழாவை மட்டும் எல்லோரும் கொண்டாடனும்னு சொல்வீங்க. ஆனா, காயத்ரி ஓதுவது ‘பிராமணர்’களுக்கு மட்டும் தானா? இது என்னங்க நியாயம்?

+ ஆந்திர முதல்வர் உத்தரவை ஏற்று – திருப்பதி தேவஸ்தான தலைவர் பதவி விலக மறுப்பு. **– செய்தி**

அதெப்படி விலகுவது? சந்திரபாபு நாயுடு கனவிலேயோ, தேவஸ்தான தலைவர் கனவிலேயோ ஏழுமலையான் வந்து அப்படி சொன்னாரா? எதைச் செய்தாலும் அதுக்கு ஒரு நியாயம் வேணும்ல!

+ ஜெயேந்திரனின் 80 ஆவது பிறந்த நாள் காஞ்சி சங்கர மடத்தில் கொண்டாடப்பட்டது. **– செய்தி**

‘முக்தி-மோட்ச’த்தை எல்லாம் முறியடிச்சு, பூலோகத்தில் வாழத் துடிக்கிறார், சாமிஜி! வாழ்த்துக்கள்!

+ திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் காணிக்கை செய்த முடியை ‘ஆன்லைன்’ மூலம் விற்பனை செய்ய தேவஸ்தானம் முடிவு. **– செய்தி**

அப்ப, முடி காணிக்கைக்கும், ‘ஆன்லைன்’ வழியாக ஏற்பாடு செய்வீங்களா?

## விநாயகர் சதுர்த்தியை காரணம் காட்டி பொதுக் கூட்ட உரிமையை மறுக்கக் கூடாது

# காவல்துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

விநாயகர் சதுர்த்தியை காரணம் காட்டி திராவிடா விடுதலைக் கழகக் கூட்டத்துக்கு காவல்துறை அனுமதி மறுத்ததை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்க மறுத்து, பொதுக் கூட்டத்துக்கு அனுமதிக்க உத்தரவிட்டது.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழ்நாடு முழுதும் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஜூலை 15இல் தொடங்கி இதுவரை 15 பொதுக் கூட்டங்கள் நடந்து முடிந்துவிட்டன. அடுத்தக் கட்டமாக 16 ஆம் தேதி கோவை மேட்டுப்பாளையத்திலிருந்து பொதுக் கூட்டங்கள் தொடங்க உள்ள நிலையில் மேட்டுப்பாளையம் காவல்துறை கூட்டத்துக்கு அனுமதி தராமல் காலதாமதம் செய்து வந்தது. கடைசி நேரத்தில் கூட்டத்துக்கு அனுமதியை மறுத்துவிட்டால், கூட்டத்தைத் தடைப்படுத்திவிடலாம் என்று காவல்துறை திட்டமிட்டது. இதைப் புரிந்து கொண்டு, கழகத் தோழர்கள் எச்சரிக்கையுடன் கூட்டத்துக்கு அனுமதி தருவதை உறுதி செய்யக் கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர முடிவு செய்தனர்.

**திட்டமிட்டபடி மேட்டுப்பாளையத்தில் கூட்டம்: கழகத்தினர் உற்சாகம்**

கோவை வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். காவிரிப் பிரச்சினைக்கு மேலாண்மை வாரியம் அமைத்தல், தஞ்சை மாவட்டத்தில் மீத்தேன் எடுக்கும் திட்டத்தை கைவிடுதல் போன்ற கழகத்தின் தீர்மானங்களை விளக்கிப் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

நீதிபதி வி.இராமசுப்பிரமணியம் முன்பு ஆகஸ்டு 9 ஆம் தேதி வெள்ளிக் கிழமை வழக்கு விசாரணைக்கு வந்தது. வினாயக சதுர்த்தியை காரணம் காட்டி அனுமதி மறுத்ததாக அரசு தரப்பில் கூறப்பட்ட வாதத்தை ஏற்க நீதிபதி மறுத்தார். சட்டம் ஒழுங்கு பிரச்சினை வருமானால், அதைக் காப்பாற்ற வேண்டியது காவல் துறை கடமை என்றும், அதைக் காரணம் காட்டி, கூட்டம் நடத்தும் அடிப்படை உரிமையை மறுக்கக் கூடாது என்றும் தீர்ப்பில் கூறிய நீதிபதி, காவிரிப் பிரச்சினைப் பற்றி விளக்கும் கூட்டத்துக்கு அனுமதி வழங்கிட உத்தரவிட்டார். கடந்த ஆண்டில் 21,000 பொதுக் கூட்டங்கள், போராட்டங்களுக்கு தமிழக அரசு அனுமதித்துள்ளதாக சட்டசபையில் முதல்வர் கூறியுள்ள நிலையில், இதற்கு ஏன் அனுமதி மறுக்க வேண்டும்? என்றும் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

பெரியார் கருத்துகளைப் பரப்பி வரும் திராவிடர் விடுதலைக் கழகக் கூட்டங்களுக்கு காவல்துறை விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பல ஊர்களில் அனுமதி மறுத்து வருகிறது. ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று, அனுமதி பெற்று கூட்டம் நடத்தும் நிலையே நீடிக்கிறது.

நாடு முழுதும் மடமையை பரப்பும் மூடநம்பிக்கைகளும் கோயில் விழா என்ற பெயரில் குத்தாட்டங்கள், ஆபாச நடனங்கள் நடத்தும் நிகழ்ச்சிகளும், தடையின்றி நடைபெறுகின்றன. மக்களிடையே பகுத்தறிவு கருத்துகளையும், அறிவியல் சிந்தனைகளையும், ஜாதி-தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி பெண்ணுரிமை கருத்துகளையும் விளக்கி, விழிப்புணர்வைத் தூண்டி வரும் திராவிடர் விடுதலைக் கழகம், தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் தாண்ட வேண்டியிருக்கிறது. இப்போது உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு கருத்துரிமைக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த வழக்கைக் கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் நடத்தி, வெற்றி தேடித் தந்துள்ளனர். திட்டமிட்டபடி மே 16 ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் கழகக் கூட்டம் நடைபெறும். மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் தலைமையில் தோழர்கள் உற்சாகமாக களப்பணியில் இறங்கியுள்ளனர்.

# ஆளே இல்லாமல் ஆதிக்கம் செலுத்தும் சமஸ்கிருதம்

1921 ஆம் ஆண்டில் இந்தியா முழுதும் சமஸ்கிருதம் பேசியோர் 356. அதில் 315 பேர் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தார்கள். தமிழ்நாடு பார்ப்பனர்களின் ஆதிக்கக் கோட்டையாக இருந்தது என்பதற்கு இது உதாரணம். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் பேசத் தெரிந்தவர் ஒருவர்கூட இல்லை. இது பெரியார் இயக்கத்துக்குக் கிடைத்த வெற்றி. தமிழ்நாட்டில் மட்டுமல்ல வடகிழக்கு மாநிலங்கள், மத்திய பிரதேசத்துக்கு அப்பால் உள்ள கிழக்கு மாநிலங்கள், ஜம்மு காஷ்மீர், கேரளா, குஜராத் மாநிலங்களிலும் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சமஸ்கிருதம் பேசுவோர் ஒருவர்கூட இல்லை.

1981இல் 6106 நபர்களாக இருந்தவர்கள், 1991இல் 49,376 நபர்களாக அதிகரித்து, 2001இல் 14,135 நபர்களாகக் குறைந்தனர். இதிலிருந்தே பதிவுகள் உண்மையானவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

“இது கணக்கெடுப்பில் நிகழ்ந்த கோளாறுகள் அல்ல. அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு, அவ்வப்போது தங்கள் ‘மொழி அடையாளத்தை’ மாற்றிக் கொள்கிறார்கள் என்பதையே காட்டுகிறது, என்கிறார் இந்திய மக்கள் மொழியியல் கணக்கெடுப்புத் துறைப் பேராசிரியர் கணேஷ் தேவி. சமஸ்கிருதம் இப்போது எவருக்கும் தாய்மொழியாக பயன்பாட்டில் இல்லை என்றாலும், அரசியல் சட்ட உரிமையையும் அந்த மொழியின் சமூக மேலாதிக்கம் கருதியும் அதை தாய்மொழியாகப் பதிவு செய்கிறார்கள்” என்கிறார், செம்மொழி மய்யத்தைச் சார்ந்த ஆய்வாளர் பி. மல்லிக்கார்ஜூன்.

“சமஸ்கிருத கிராமம் என்று அழைக்கப்படும் கருநாடகத்திலுள்ள மத்தூரிலேயே அந்த மொழி தெரிந்தவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் உள்ளனர். பயன்பாடு இல்லாமலேயே சமஸ்கிருதம் தனது செல்வாக்கை செலுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டில் எங்கோ ஒரு மூலையில் சமஸ்கிருதம் பேசப்படுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்., ஆனால் அது எங்குமே பேச்சு வழக்கில் இல்லை. அது ஒரு கருத்து என்ற அளவிலேயே நம்மிடம் இருக்கிறது” என்கிறார் இந்திய மொழியியல் கணக்கெடுப்புத் துறை பேராசிரியர் கணேஷ் தேவி.

ஆகஸ்டு 10, 2014 ‘இந்து’ நாளேடு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

தலையங்கம்

# ‘வேதகாலம்’ திரும்புகிறது!

மோடியின் ஆட்சி நாட்டை மீண்டும் வேத காலத்துக்கு அழைத்துச் செல்ல உறுதி ஏற்றிருப்பதாகவே தெரிகிறது. ஒன்றன்பின் ஒன்றாக அதற்கான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. 14,135 பார்ப்பனர்கள் மட்டுமே தாய்மொழியாகப் பதிவு செய்துள்ள சமஸ்கிருதத்தை இந்தியாவின் அனைத்து மாநில சி.பி.எஸ்.ஈ. பள்ளிகளிலும் வார விழாக்களாகக் கொண்டாடி போட்டிகள் நடத்தி அனைத்து மொழிகளுக்குமே ‘சமஸ்கிருதமே தாய்’ என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மனித வளத் துறை சுற்றறிக்கை அனுப்பியது. இதைத் தொடர்ந்து ஓம் பிரகாஜ் என்ற பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த ஜூன் 6, 2014 இல் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில், தனி நபர் மசோதா ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

‘சமஸ்கிருத மேம்பாட்டுச் சட்டம்’ என்று பெயரிடப்பட்டுள்ள அந்த மசோதா, மத்திய, மாநில அரசுப் பள்ளிகள் அனைத்திலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப்பாடமாக்குவதோடு, செயல்படுத்தாத பள்ளிகளின் அங்கீகாரத்தை நீக்கம் செய்ய வேண்டும் என்று கோருகிறது. இதை நடைமுறைப்படுத்துவதற்கு நான்கு உறுப்பினர்களுக்கு மேல் இல்லாத ஒரு குழுவையும் அதற்குத் தலைவரையும் நியமித்து, (அதாவது பார்ப்பனர்களைக் கொண்ட குழு) அவர்களுக்கான ஊதியத்தையும் வரையறை செய்து, முழு அதிகாரம் வழங்கி, உடனடியாக அரசிதழில் அறிவிக்கவேண்டும் என்று மசோதா கூறுவதோடு, மாநில அரசுகளுக்கு இதற்குத் தேவையான அளவு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவும் வலியுறுத்துகிறது.

இதைத் தவிர யோகி ஆதித்தியாந்த் என்ற பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜூன் 25, 2014 அன்று நாடாளுமன்றத்தில் மற்றொரு தனி நபர் மசோதாவை தாக்கல் செய்துள்ளார். நாடு முழுதும் பசுவையும் அதன் கன்று குட்டியையும், வெட்டுவதைத் தடை செய்யக் கோருகிறது இந்த மசோதா. பசு மட்டுமல்ல, காளை, எருதுகளுக்கும் கன்று குட்டிகளுக்கும் ‘பசு’ என்ற சொல்லே பொருந்தும் என்று கூறும் மசோதா ஒட்டு மொத்தமாக மாட்டை வெட்டுவதற்கே தடை போட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மாட்டுக்கறி விற்பனை செய்யக் கூடாது என்றும், மீறுவோருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமே சேர்த்து விதிக்கலாம் என்று கூறுகிறது. இந்த மசோதா சட்டமானால், மாட்டுக்கறி உணவை விற்பதும் சாப்பிடுவதும் தண்டனைக்குரிய குற்றமாகிவிடும்.

ஏற்கனவே பா.ஜ.க. ஆளும் ம.பி. மாநிலத்தில் பசு மாட்டை வெட்டினால் 7 ஆண்டு சிறை; ஓட்டல்களில் வீடுகளில் மாட்டுக்கறி சமைப்பது குற்றம் என்ற சட்டம் 2011 முதல் அமுலில் இருந்து வருகிறது. பா.ஜ.க. ஆட்சி நடத்தும் உத்தரகாண்ட் மாநிலத்தில் ‘பசு மாட்டு மூத்திரத்தை’ ஆராய்ச்சி செய்யும் சோதனைச் சாலைகளையும் பசு மாட்டுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு மய்யத்தையும் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடத்தி வருகிறது. அம்மாநிலத்தின் இரண்டாவது ஆட்சி மொழியாக ‘சமஸ்கிருதம்’ அறிவிக்கப்பட்டு, அரசு ஆணைகள், அறிவிப்புகள், சமஸ்கிருதத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பகவத், புவனேசுவரத்தில் விழா ஒன்றில் பேசுகையில்:

“அனைத்து இந்தியர்களின் கலாச்சார அடையாளமே ‘இந்துக்கள்’ என்பதுதான். இங்கிலாந்து நாட்டவர்களை இங்கிலாந்துக்காரர்கள் என்றும், ஜெர்மன் நாட்டுக்காரர்கள் ஜெர்மானியர் என்றும், யு.எஸ்.ஏ. நாட்டினரை அமெரிக்கர்கள் என்றும் அழைக்கும்போது, இந்துஸ்தானில் இருப்பவர்களை ஏன் இந்துக்கள் என்று அழைக்கக் கூடாது” என்று பேசியிருக்கிறார். இந்தியா என்பதே ‘இந்துஸ்தான்’ தான் என்ற ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தை வலியுறுத்தி, ‘இந்தியா’ என்று அழைப்பதே தவறு என்று உறுதி செய்கிறார். இந்தியாவை ‘இந்துஸ்தான்’ என்று அழைப்பதற்கான காலம் வந்துவிட்டதாகவே ஆர்.எஸ்.எஸ். கருதுகிறது. இதற்கு வரலாற்றுப் பின்னணியும் உண்டு.

1950 ஆம் ஆண்டு இந்து மகாசபைத் தலைவரான ஷியாம் பிரசாத் முகர்ஜி என்ற பார்ப்பனர், அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்க ஆலோசித்தபோது, அதற்கு ‘இந்து ராஷ்டிரா’ என்று பெயர் சூட்ட விரும்பினார்.

இப்படி வெளிப்படையாக மத அடையாளத்தை பெயரில் பதிவு செய்ய வேண்டாம் என்று, கட்சிக்குள் கருத்து மாறுபாடுகள் வந்தன. மிகவும் தயக்கத்தோடு ‘பாரதிய ஜன சங்கம்’ என்று பெயர் சூட்ட ஒப்புக் கொண்டார் முகர்ஜி. அப்போது முகர்ஜி வெளியிட்ட கருத்துகள் முக்கியமானதாகும். ‘பாரதிய’ என்றாலும், ‘இந்திய’ என்றாலும் இந்துக்களைத்தான் குறிக்கும் என்றும், மேற்கத்திய கலாச்சாரத்தில் மூழ்கியவர்கள், இதை ஏற்கத் துணிவற்ற கோழைகளாக உள்ளார்கள் என்றும், இவர்கள் தங்களின் தாழ்வு மனப்பான்மையை விட்டொழிக்கும் சூழல் வரும்போது ‘இந்துராஷ்டிரம்’ என்று பெயர் மாற்றிக் கொள்ளலாம் என்றும் அப்போது கூறினார். அதற்கான சூழலும் காலமும் கனிந்துவிட்டதாக இப்போது ஆர்.எஸ்.எஸ். கருதுகிறது. அதைத்தான் ஆர்.எஸ்.எஸ். தலைவர் வெளிப்படுத்துகிறார். (பால்ராஜ்மதோக் எழுதிய முகர்ஜியின் சுயசரிதையில் இதைக் குறிப்பிடுகிறார்)

அரசியலமைப்பு கூறும் ‘இந்தியா’ என்ற அமைப்பையே ஏற்கத் தயாராக இல்லை என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். தலைவரின் இந்தக் கருத்து. ஆனால், தெலுங்கானாவும் காஷ்மீரும் இந்தியாவில் கட்டாயப்படுத்தி சேர்க்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை வெளியிட்ட தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவின் மகளும், ‘அவரது ராஷ்டிரிய சமிதி’ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் கவிதா மீது, பிணையில் வெளிவர முடியாத ‘தேசத் துரோக’ வழக்கைப் பதிவு செய்யுமாறு அய்தராபாத் பெருநகர நீதிமன்றம் காவல்துறைக்கு உத்தரவு போடுகிறது.

அய்தராபாத் சமஸ்தானமும் காஷ்மீரும், அய்தராபாத் நிசாம் மற்றும் இந்து மன்னர் அதிகாரத்திலிருந்து இந்தியாவில் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையைப் பேசுவதே தேசத் துரோகம் என்றால், அரசியலமைப்பு உறுதி செய்யும் ‘இந்தியா’வை மறுத்து ‘இந்துஸ்தான்’ என்று பேசுவதற்குப் பெயர் என்ன?

பதவி ஏற்ற சில மாதங்களிலே நேபாளத்துக்கு பயணம் மேற்கொண்ட நரேந்திர மோடி, தன்னை ஒரு இந்துத்துவா வாதியாகவே அடையாளம் காட்டிக் கொண்டார். காவி உடை – சந்தனப் பெட்டி – உருத்திராட்ச மாலையுடன் ‘பகவதிநாதன்’ கோயிலுக்குள் சாமி தரிசனம் செய்த மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் ‘இந்து வைதிக பார்ப்பனிய’ கருத்தையே விதைத்தார். இந்து மன்னராட்சி தூக்கியெறியப்பட்டு, மக்களாட்சி மலர்ந்துள்ள நாடு நேபாளம். அந்நாட்டுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கும் முயற்சி நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், நாடாளுமன்றத்தில் பேசிய மோடி, நவீனகால சட்டங்களை உருவாக்கும்போது, அவை வேதங்களுக்கும் உபநிஷதங்களுக்கும் இணையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று பேசி, தனது பார்ப்பனியப் பார்வையை வெளிப்படுத்தியிருக்கிறார். இவை மட்டுமா?

இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் தலைவராக்கப்பட்டுள்ளார், ஒய். சுதர்சனராவ் என்ற பார்ப்பனர். புராணங்களான இராமாயணமும் மகாபாரதமும் வரலாறு என்றும், அது நடந்த காலம், தேதியை அறிவிக்கப் போவதாகவும் கூறுகிறார், இந்த ‘ஆய்வாளர்’. பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்தது என்பதற்கு தொல்பொருள் துறை ஆதாரங்கள் இருந்தன என்று கூறியதும் இவர்தான்.

ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்புகள் மோடியையும், அமைச்சர்களையும் சந்தித்து, செயல் திட்டங்களை முன் வைத்து வருகின்றன. பாடத் திட்டங்களிலும் ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சிலிலும் ‘இந்துத்துவா’ திட்டங்களை தயாரித்து வருகிறது ‘வித்யார்த்தி பரிஷத்’. மனித வளத் துறை அமைச்சர் இரானியை ஏற்க வைப்போம் என்கிறார், அதன் தேசிய அமைப்புச் செயலாளர் சுனில். ஆக வேகவேகமாக பார்ப்பனியம் காய் நகர்த்துகிறது.

இந்தியாவில், கடந்த காலங்களில் நடந்த காங்கிரஸ் ஆட்சி, ‘மதச்சார்பின்மை’ என்ற பெயரில் பார்ப்பன கட்டமைப்பை பல்வேறு துறைகளில் உறுதி செய்தது. மோடி ஆட்சி வெளிப்படையாகவே ‘வேத கால’ ஆட்சியைத் தொடங்கிவிட்டது. நாம் இந்தியர்களா? இந்துஸ்தானிகளா? என்ற ஆராய்ச்சிகளை அவர்களிடமே ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழர்களாக – பார்ப்பனிய ஜாதி எதிர்ப்புத் தமிழர்களாகப் போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது!

## நாகை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள்

24.7.2014 அன்று மாலை 3 மணியளவில் நாகை மாவட்டம் கழகக் கலந்தாய்வுக் கூட்டம், மயிலாடுதுறை புத்தகச் சோலை மேல்தளத்தில் நடைபெற்றது. தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார். மாநில பொருளாளர் ரெத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பா. சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தலைவர் கொளத்தூர் மணி புதிய பொறுப்பாளர்களை அறிவித்தார்.

மாவட்டப் பொறுப்பாளர்கள் : தலைவர் ம. மகாலிங்கம், அமைப்பாளர் மு.அன்பரசன், செயலாளர் தெ.மகேசு, இணைச் செயலாளர் தெ.ரமேசு, பொருளாளர் ந.விஜயராகவன்.

மயிலாடுதுறை நகரப் பொறுப்பாளர்கள் : தலைவர் நாஞ்சில் சங்கர், செயலாளர் ப.தமிழ் வேலன், இணைச் செயலாளர் ரா.ராஜராஜசோழன், அமைப்பாளர் ஜி.ஆர். செந்தில், பொருளாளர் கே.ஜி.ஆர். உதயகுமார். ஒன்றியப் பொறுப் பாளர்கள் ஜெயராஜ், ஜெ. இயற்கை.

தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர்கள் : துரை (ஆசிரியர்), த.நன்மாறன் (வழக்கறிஞர்), தெ. சுரேசு, ஜோன் பிரதீப்.

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையாளப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒன்று கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சி யும் ஏற்படவேண்டும்” என்றெல்லாம் எழுதிவிட்டு, இந்தி திணிக்கப்பட்டால் பார்ப்பனரல்லாத மாணவர்கள் சந்திக்க இருக்கும் பின்னடைவுகளை விளக்கிய பெரியார், தமிழ்ப் பண்டிதர்களை நோக்கி தன் சீற்றத்தை வெளிப்படுத்துகிறார்.

கம்பராமாயணத்தின் கருப்பொருள் கண்டு பிடித்த மக்களில் 100க்கு 5 பேருக்காவது சுயமரி யாதையோடு சமூகப் பற்றோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். ஆரிய இராமாயணம் கொளுத்தப்பட வேண்டும் என்று ஆதியில் நாம் சொன்ன காலத்தில், “இராமாயணக் கதை ஆபாச மானது, வெறுக்கத்தகுந்தது, கீழ் மக்கள் இயற்கை யையும், கெட்ட குணங்களையும் சித்தரிப்பது என்றும், ஆனால் கம்பன் கவித்திறம், தமிழின் கலைத்திறம் முதலியவை கம்பராமாயணத்தில் மலத்தில் கிடக்கும் முத்துப்போல் பொதிந்து கிடப்பதால் அதை எரிக்கக்கூடாது” என்றும் சொன்ன கம்பராமாயணக் கருப்பொருள் பண்டிதர்கள் இன்று பக்கா பட்டரான ஆச்சாரி யார் துளசிதாஸ் இராமாயணம் படிப்பதற்காக ஹிந்தியைக் குழந்தைகளுக்குக் கட்டாயப் பாட மாக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து வரும்போது, “மனைவியை மற்றொருவன் சேலையை அவிழ்த்துப் பலாத்காரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள் கதை (மகாபாரதம்) போல் இன்று வாய் திறவாமல் அடிமையாய், துரோகியாய் தமிழ் மாதுக்கு துரோகியாய் வீற்றிருக்கும் காரணம் என்ன என்று கேட்கிறோம்” என மகாவீரர்கள் என்று பீற்றிக் கொண்ட பீமன், அர்ச்சுனன் உள்ளிட்ட பாண்ட வர்கள் முன் அவர்களது கூட்டுரிமை மனைவி துரவுபதை (பாஞ்சாலி)யின் துகிலை உரித்தபோது நெட்டை மரங்களாக நின்றதைப்போல், நீங்கள் பெருமையாக அன்னை என்று போற்றும் தமிழ்ப் பெண்ணுக்கு ஆபத்து வரும்போது வாளாவிருக்கும் தமிழ்த் துரோகத்தைக் கடுமையாக சாடுகிறார் பெரியார். அதோடு விட்டு விடவில்லை பெரியார். தொடர்ந்து அத்தலையங்கத்தில் தமிழ்ப் பண்டிதர்கள் எவ்வித எதிர்வினையும் ஆற்றாமல் கிடப்பதைக் கண்டு மேலும் பொங்குகிறார்.

(தொடரும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (6)

# 1926லேயே இந்தி எதிர்ப்பை தொடங்கியவர், பெரியார்

***இந்தி எதிர்ப்பைத் தொடங்கியது தமிழ் அறிஞர்கள். பெரியார் பிறகு வந்து இணைந்து கொண்டார் என்று பெ.மணியரசன் எழுதியது சரியா?***

*ஆனால், தான் கடந்த அய்ந்தாண்டுகளாக ஒவ்வொரு மாகாண காங்கிரசு மாநாடுகளிலும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்த வகுப்புவாரி தீர்மானம் ஏற்கப்படாததையும், இறுதியாக காஞ்சிபுரம் மாநாட்டிலும் விதிகளின்படி 30 உறுப்பினர்களுக்கு மாறாக எழுபது உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்றுக் கொடுத்தும் விவாதத்துக்குக் கூட எடுத்துக் கொள்ளப்படாமல் சூழ்ச்சியாக கைவிடப்பட்டதையும் கண்ட பெரியார், காங்கிரஸ் மாநாட்டில் இருந்து வெளியேறுகிறார். வெளியேறிய பெரியார், தான் காங்கிரசில் இருந்தபோது கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி வந்த காங்கிரசு-காந்தி கொள்கைகளை மீளாய்வு செய்யத் தொடங்குகிறார்.*

*முதலில் அவரால் திறனாய்வுக்கு உள்ளானக் கொள்கை காந்தியின் ‘இந்தி’ கொள்கை தான். 1925 நவம்பர் இறுதியில் வெளியேறிய பெரியார், 1926 மார்ச் மாதம் தனது ‘குடிஅரசு’ இதழில், “தமிழிற்குத் துரோகமும், ஹிந்தி பாஷையின் இரகசியமும்” என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.*

*இந்திப் படிப்பவர்களில் 100க்கு 3 பேராய் மக்கள் தொகையிலுள்ள பார்ப்பனர்களில் 100க்கு 97 பேரும், 100க்கு 97 பேராய் உள்ள பார்ப்பனரல்லாதாரில் 100க்கு 3 பேர்கூட படித்திருக்க மாட்டார்கள். ஆனால் பணம் 100க்கு 97 ரூபாய் பார்ப்பனரல்லாதார் பணம் என்பதாக குறிப்பிட்டுவிட்டு, “இந்தப் படிப்பின் எண்ணிக்கை எப்படி இருந்தாலும் நமக்கு அதைப் பற்றி அதிகக் கவலை ஒன்றும் இல்லை. ஆனால், இதில் 100 இல் ஒரு பங்கு கவலைகூட தமிழ்மொழிக்கு எடுத்துக் கொள்வதில்லை என்பதையும், இந்தி படித்த பிராமணர்களால் நமக்கு ஏற்படும் கெடுதியையும் நினைக்கும்போது, இதைப்பற்றி வருந்தாமலும்,* **இம்மாதிரி பலன்தரத்தக்க இந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள்தனத்திற்கும், நாம் பணம் கொடுத்த பைத்தியக்காரத் தினத்திற்கும் வெட்கப்படாமலும் இருக்க முடியவில்லை”** *என்று, தான் இந்தி பள்ளயைத் தன் செலவில் நடத்தியதையெண்ணி தான் இழைத்துவிட்ட பிழைக்கு தன்னையே நொந்து கொள்கிறார் பெரியார். தொடர்ந்து இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கப்படலாம் என்றும் அது பெரும்பான்மையாளராய் வாழும் பார்ப்பனரல்லாத மக்களுக்குத் தீங்காகவே முடியும் என்பதையும் எழுதுகிறார்.*

*“இந்தியைப் பொதுமொழியாக்க வேண்டும் என்ற கவலையுள்ளவர்கள் போல், தேசத்தின் பேரால் ஆங்காங்கு பிராமணர்கள் பேசுவதும், அதைச் சர்க்கார், பள்ளிக்கூடம் முதலிய பலவிடங்களில் கட்டாயப்பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும் யார் நன்மைக்கு?* **இனி கொஞ்ச காலத்திற்குள் இந்திப் பிரச்சாரத்தின் பலனை நாம் அனுபவிக்கப் போகிறோம். பிராமணரல்லாதார்க்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் இந்தியும் ஒன்றாய் முடியும் போலிருக்கிறது”** *என்று முன் உணர்ந்து எழுதுகிறார்.*

*“இந்தியின் தீங்கு குறித்து அறிந்தாலும், அவர்கள் பார்ப்பனாகளுக்கு பயந்து கொண்டும், தேச துரோகி பட்டம் வந்துவிடுமோ என்று அஞ்சியும் வெளியே பேசத் துணிவதில்லை” என்கிறார் பெரியார்.*

*“பொதுவாக இந்தி என்பது வெளி மாகாணங்களில் பிராமண மதப் பிரச்சாரம் செய்யக் கற்பித்துத் தரும் ஒரு வித்தையாகிவிட்டது. இரண்டொருவருக்கும் அதன் இரகசியம் தெரிந்தாலும் பிராமணர்களுக்குப் பயந்து கொண்டு தாங்களும் ஒத்துப் பாடிவிடுகிறார்கள். யாராவது துணிந்து வெளியில் சொன்னால் இவர்களைத் தேசத் துரோகியென்று சொல்லிவிடுகிறார்கள்” என்று அக்கட்டுரையில் பெரியார் கூறுகிறார். (‘குடிஅரசு’ 7.3.1926)*

*ஒரு வேளை காஞ்சிபுரம் மாநாட்டில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., மக்களுக்கு இந்தி கற்பிக்க எடுத்த முயற்சிகளை எண்ணி, கொண்டு வந்த தீர்மானத்தை மனத்தில் கொண்டு இவ்வாறு எழுதியிருப்பாரோ தெரியவில்லை.*

*அடுத்ததாக 20.1.1929 ‘குடிஅரசில்’ ‘இந்திப் புரட்சி’ எனும் தலைப்பில் தலையங்கம் ஒன்றை எழுதுகிறார் பெரியார். இந்தியைப் பரப்பும் திட்ட செலவுகளுக்காக நிதி திரட்டும் முயற்சியைக் குறித்து எழுத வந்த பெரியார், இந்தி மொழி, மொழியின் தகுதி, பயன் குறித்தெல்லாம் விரிவாக எழுதிவிட்டு, “இப்போது தமிழ்நாட்டில் இந்தி பாஷை பரப்ப வந்திருப்பதென்பது, தற்காலம் தமிழ்நாட்டிலுள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால், இதற்கு எந்த பார்ப்பனரல்லாதாராவது பணம் கொடுத்தால், அது பெரிய சமூகத் துரோகமாகும்” என்று முடிக்கிறார்.*

## ‘கண்டதைப் படிப்பவன்’

*அடுத்ததாக 10.5.1931 ‘குடிஅரசு’ இதழில் ‘கதரும் ஹிந்தியும்’ என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையை எழுதியுள்ளார் பெரியார். அக்கட்டுரையில், தோழர் பெ. மணியரசன் இந்தி எதிர்ப்புக்கு முன்னோடிகளாகக் கூறும் தமிழ்ப் பண்டிதர்களைப் பற்றி, சீற்றத்தோடு எழுதுகிறார்.*

*“ஹிந்தியை அரசியல் விஷயமாக ஆக்கி, அதைக் கதரைப்போல் - ஏன் கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப் பார்ப்பது எவ்வளவு வஞ்சகமான காரியம் என்பதை நமது சோணகிரிகள் அநேகர் இன்னும் உணரவே இல்லை.* **தமிழ்ப் பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்து சூடு போட்டதுபோல் மேலெல்லாம் தீட்டிக் கொண்டு சிவ சிவ சிவ என்பதற்கும், ராம ராம ராம என்பதற்கும் உதவுவார்களே தவிர** *மற்றபடி நமது மக்கள் மீது அனாவசியமாக ஒரு பாஷை, சூழ்ச்சித் திறத்தில் சுமத்தப்படுகின்றதே என்ற அறிவும் கவலையும் கிடையாது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது” என்கிறார்.*

*இவ்வரிகள் திரு.வி.க.வைச் சுட்டுகிறதா? அல்லது மறைமலை அடிகளையா? நாமம் தீட்டும் ராகவையங்காரர்களையா? நமக்குப் புலப்படவில்லை. ஆனால், தமிழறிஞர்கள் இந்தித் திணிப்பைப் பற்றி அக்கறையற்றே இருந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படுகிறது.*

*அடுத்ததாக, 14.6.1931 இல் நன்னிலத்தில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில், ‘ஹிந்தி கண்டனத் தீர்மானம்’ நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 17.1.1932 இல் ‘சமஸ்கிருத சனியன்’ என்ற தலைப்பில் ஹிந்தியை எதிர்த்தும், 18, 19.6.1932 இல் நடைபெற்ற மன்னார்குடி சுயமரியாதை மாநாட்டில் ஆற்றப்பட்ட இந்தி எதிர்ப்பு சொற்பொழிவுகள் குறித்தும் ‘குடிஅரசு’ எழுதியுள்ளது.*

*13.1.1936 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் திருநாள் விழா நடைபெற்றுள்ளது. அவ்விழாவில் பெரியாரும், திரு.வி.க.வும் புகழ்பெற்ற தமிழ்ப் புலவர் கா.நமச்சிவாய முதலியாரும் கலந்து கொண்டுள்ளனர்.*

*அதில் தமிழ் குறித்தும், தமிழ் வளர்ச்சிக் குறித்தும், தமிழை மேம்படுத்த தமிழை மதத்திலிருந்து பிரிக்க வேண்டும் எனவும் தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும், சுயமரியாதையற்றதும், ஆபாசமானதுமான விழாக்களைக் கொண்டாடுவதைவிட தமிழ்த் திருநாளாம் பொங்கலைக் கொண்டாட வேண்டும் என வலியுறுத்தியும் விரிவான சொற்பொழிவு ஒன்றினை ஆற்றியுள்ளார்.*

*அவ்விழாவிலும் இந்தி எதிர்ப்புக் கருத்துக்களைப் பேசியுள்ளார். “தமிழ்நாட்டில் வந்து தமிழ் கற்று வயிறு வளர்ப்பவர்களாகிய பார்ப்பனர்களே இந்தி பாஷை, இந்திய பாஷையாக வேண்டுமென்று முயற்சித்து வெற்றி பெற்று வருகிறார்கள். கோர்ட் பாஷை, அரசாங்க பாஷை ஆகியவையெல்லாம் இந்தி மயமாக வேண்டும் என்கிறார்கள். காரணம் கேட்டால் இந்தி பாஷையில் துளசிதாஸ் இராமாயணம் நன்றாய் விளங்குமென்கிறார்கள்” என்றெல்லாம் பேசி வந்த பெரியார், தோழர் மணியரசனின் ‘முன்னோடி’ தமிழறிஞர்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.*

***“தமிழ்ப் பண்டிதர்களுக்கு இதைப் பற்றி சிறிதும் கவலை இருந்தது என்று சொல்ல முடியவில்லை. தமிழ்ப் பண்டிதர்கள் இந்த அரசியல் வாதிகளின் கூச்சலுக்கும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கும் பயந்து கொண்டு வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள்”*** *என்பதே அது.*

*இந்த இடித்துரை எங்கோ நடந்த கூட்டத்தில் அல்ல; ஒரு கல்லூரி கூட்டத்தில் - மாணவர்களும், பேராசிரியப் பெருமக்களும், குறிப்பாக தமிழ்ப் பேராசிரியர்களும் உள்ள அவையில், அதுவும் திரு.வி.க., கா. நமசிவாய முதலியார் போன்ற தமிழறிஞர்களும் இருந்த அவையில்தான் தமிழ்ப் புலவர்களின் இந்தி குறித்துள்ள கவலையற்ற போக்கைக் கண்டித்துப் பேசியுள்ளார்.*

*“தமிழறிஞர்கள்தான் இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கினர். பெரியார் பின்னர் வந்து சேர்ந்து எல்லாப் புகழையும் அவரே தட்டிப் பறித்துச் சென்றுவிட்டார்” என்ற ஒரு செய்தி பல நிகழ்வுகளில் பேசப்படுகின்றது. ‘நாம் தமிழர் கட்சி’ ஆவணத்தில், சக்திவேல் என்ற நபர் எழுதியுள்ள, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற நூலில், அவரே வெளியிட்ட ஒளிநாடாவில் என பரவலாக இக்கருத்தே முன் வைக்கப்படுகிறது.*

*அவர்கள் கூறும் வாதம் - 10.8.1937 அன்று சென்னை இராமகிருஷ்ண மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில்தான் அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் இராஜாஜி, அடுத்தக் கல்வியாண்டு முதல் இந்தி கட்டாயப் பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் வைக்கப்படும் என்று பேசினார். உடனே தமிழறிஞர்கள் 26.8.1937 அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தியதுதான் முதல் இந்தி எதிர்ப்பு நடவடிக்கையாக எல்லோராலும் கூறப்படுகிறது.*

*ஆனால், அதற்கு முன்னதாகவே 22.8.1937 அன்று ‘குடிஅரசில்’, “சுயாட்சியா? பழிவாங்கும் ஆட்சியா?” என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை பெரியார் எழுதியிருக்கிறார்.*

*அதில், ஆங்கிலேயர் ஆட்சியையும், பார்ப்பன ஆட்சியையும் ஒப்பிட்டு இரண்டுக்கும் ஒரே கொள்கைதான் என்கிறார்.*

*அக்கிரகாரச் சனியன்கள் பிரிட்டிஷ் சர்க்காரை சரணாகதி அடைந்து மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்த ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு துறையிலும் பழி வாங்கும் குணத்தையும், அக்கிரகார ஆதிக்கத்தை என்றென்றும் நிலைநிறுத்தும் கவலையும் கொண்டு சூழ்ச்சி ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது” என்று தொடங்கும் அந்த நீண்ட தலையங்கத்தின் இடையில் -*

*“இன்று நமக்கு தொல்லையாயும், நம் சுயமரியாதை வாழ்வுக்கு ஈனமாகவும் இருந்து வரும் ஆட்சி பார்ப்பன ஆட்சியேயாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எப்படியாவது பிரிட்டிஷ் கொடி பறக்க வேண்டியதுதான் அதன் முக்கியக் கொள்கையோ அதேபோல் பார்ப்பன ஆட்சிக்கும் எப்படியாவது பார்ப்பனரல்லாத மக்களை அழுத்தி அழித்து பார்ப்பன ஆட்சியை (மனுநீதி கொடுங்கோல் ஆட்சியை) நிலைநிறுத்த வேண்டும் என்பதேயாகும்” என்கிறார்.*

*அதுமட்டுமல்லாமல், இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிப் பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்த சேலம் எஸ்.வி. இராமசாமி, இராஜாஜி அமைத்த அமைச்சரவை பற்றி வெளியிட்டிருந்த அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.*

*“அக்கிரகார மந்திரி ஆட்சியை சேலம் பாரிஸ்டர் எஸ்.வி.ராமசாமி சரியான உபமானத்துடன் வருணித்துக் காட்டினார். அதாவது இன்றைய ஆட்சியை ஒரு பிளேக் வியாதிக்கு ஒப்பிட்டார்” என்பதை எடுத்துரைத்து,*

*“அக்கிரகார ஆட்சி இன்று நம் மக்களின் அறிவு, சுதந்திரம், பொருளாதாரம், நாகரிகம் ஆகிய மூன்று நான்கு காரியங்களிலும் வெளிப்படையாய் தைரியமாய் பழி வாங்கும் தன்மையோடு கைவைத்து காரியங்களைக் காட்டு மிருகத்தனமாய் நடத்த ஆரம்பித்துவிட்டது. மனித சமூக அறிவை பாழ்படுத்த வேண்டியதற்காகவே ஹிந்தி பாஷையைத் தமிழ் மக்கள் படித்தாக வேண்டும் என்று கட்டாயப் படுத்தும் கல்வியைத் திணிப்பதை” எடுத்துக் காட்டுகிறார்.*

*“கல்வி விஷயத்தில் இரண்டு முக்கிய விஷயம்*

*(2 ஆம் பக்கம்)*

DATE OF PUBLICATION 13.08.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776


# நான்கு கட்டங்களாக நடந்த 16 கழகக் கூட்டங்கள்

திராவிடர் விடுதலைக் கழகம் கோவை செயலவையில் நிறைவேற்றிய தமிழர் உரிமை பறிப்புகள் பார்ப்பனப் பண்பாட்டுத் திணிப்புக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானங்களை விளக்கி நாடு முழுதும் பரப்புரைக் கூட்டங்களை நடத்தி வருகிறது. கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், பரப்புரைச் செயலாளர், செயலவைத் தலைவர், மாணவரணி பொறுப்பாளர் ஆகியோர் பங்கேற்று வருகின்றனர்.

முதல்கட்டமாக ஜூலை 15 ஆம் தேதி பழனியிலும், 16 ஆம் தேதி காரைக்குடியிலும், ஜூலை 18 ஆம் தேதி நெல்லை மாவட்டம் பாவூர் சத்திரத் திலும் நடைபெற்றது. இரண்டாம் சுற்றுப்பயணம் ஜூலை 23இல் மன்னார்குடியிலும், 24 ஆம் தேதி மயிலாடு துறையிலும், ஜூலை 26 ஆம் தேதி சின்ன சேலத்தி லும் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன. மூன்றாவது கட்டமாக ஜூலை 30 ஆம் தேதி காஞ்சி மாவட்டம் கூடுவாஞ்சேரியிலும், ஜூலை 31 ஆம் தேதி சென்னை ஓட்டேரியிலும், ஆகஸ்டு முதல் தேதி வேலூரிலும், ஆகஸ்டு 2 ஆம் தேதி கிருட்டிணகிரி மாவட்டம் இராயக் கோட்டையிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன. நான்காம் கட்டமாக ஆகஸ்டு 6 ஆம் தேதி சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரிலும், ஆகஸ்டு 7 ஆம் தேதி திருச்சியிலும், ஆகஸ்டு 8 ஆம் தேதி கரூரிலும், 9 ஆம் தேதி திருச்செங்கோட்டிலும், 10 ஆம் தேதி ஈரோடு மாவட்டம் சிவகிரியிலும் பரப்புரைக் கூட்டங்கள் எழுச்சியுடன் நடந்தன. கூட்டங்கள், கருத்தரங்குகள்போல் மக்களிடம் கருத்துகளை விதைத்தன; விளக்கம் பெற்ற மக்கள் பேராதரவு காட்டினர். செய்தி விவரம்:

**ஆத்தூர் :** ஆத்தூரில் ஆகஸ்டு 6 ஆம் தேதி மாலை 7 மணியளவில் பறை இசையுடன் கூட்டம் தொடங்கியது. சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க. சக்திவேல் தலைமையில் நடந்த கூட்டத்தில் பிரபு வரவேற்புரையாற்றினார். சேலம் மண்டல செயலாளர் அ.சக்திவேல் உரையைத் தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். கூட்டத்தை முன்னின்று தோழர்களுடன் ஒருங்கிணைந்து நடத்திய மாவட்ட துணைச் செயலாளர் ந.மகேந்திரன் நன்றி கூறினார். முன்னதாக அண்ணா கலையரங்கக் கூடத்தில் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஆத்தூர் நகரத் தலைவராக ந.மகேந்திரனும், செயலாளராக கணபதியையும் கழகத் தோழர்களுடன் கலந்து ஆலோசித்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிவித்தார். கழகப் பொருளாளர் இரத்தினசாமி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார்.

**திருச்சி, பெரம்பலூர் :** ஆகஸ்டு 7 ஆம் தேதி திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே மாவட்டத் தலைவர் ஆரோக்கிய சாமி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன், மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார், சிறீரங்கம் நகர கழகத் தலைவர் பெரியார் தொண்டர் எஸ்.எஸ்.முத்து, மாநகர கழக அமைப்பாளர் தமிழ்முத்து, மாவட்ட அமைப்பாளர் குணாராஜ், பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். மாவட்ட துணைத் தலைவர் டார்வின்தாசன் நன்றி கூறினார். முன்னதாக நடந்த மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.



திருச்சி - மண்டல அமைப்பு செயலாளர் - த. புதியவன்; மாவட்டத் தலைவர் மீ.இ.ஆரோக்கியசாமி; மாவட்ட துணத் தலைவர் டார்வின் தாசன்; மாவட்டச் செயலாளர் கந்தவேல் குமார்; மாவட்ட அமைப்பாளர் குணாராஜ்; மாநகர அமைப்பாளர் தமிழ்முத்து; மாவட்ட பொருளாளர் மனோகரன்; மண்ணச்ச நல்லூர் ஒன்றிய அமைப்பாளர் செந்தில்குமார். பெரம்பலூர் - மாவட்டத் தலைவர் தாமோதரன்; மாவட்ட அமைப்பாளர் பழனி; நகர செயலாளர் ராஜேஷ்குமார்.

**கரூர் :** ஆகஸ்டு 9 ஆம் தேதி கரூர் உழவர் சந்தை எதிரில் விளக்கப் பொதுக் கூட்டம், பறை இசையுடன் தொடங்கியது. மாவட்டத் தலைவர் முகம்மது அலி எனும் பாபு தலைமை தாங்கினார். மாவட்ட




செயலாளர் இரா. காமராசு வரவேற்புரையாற்ற, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில துணை செயலாளர் அக்னி இல. அகரமுத்து, ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த முல்லையரசு, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்த பழனிச்சாமி, ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். முத்து நன்றி கூறினார். முன்னதாக மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

தலைவர் - முகமது அலி (எ) பாபு, துணைத் தலைவர் - சத்யசீலன் (குளித்தலை), செயலாளர் - காமராஜ் (கிருட்டிணராயபுரம்), பொருளாளர் - மோகன்தாஸ் (கடவூர்), அமைப்பாளர் - சண்முகம் (சின்னதாராபுரம்). கிருட்டிணராயபுரம் ஒன்றியத் தலைவர் - ஸ்ரீகாந்த், செயலாளர்-ரஞ்சித். கடவூர் ஒன்றியம் அமைப்பாளர் விஜி. க.பரமத்தி ஒன்றியம் - இரா. வடிவேல்.



**திருச்செங்கோடு:** ஆகஸ்டு 9 ஆம் தேதி மாலை திருச்செங்கோட்டில் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் தொடங்கிய போது மழைத் தூறத் தொடங்கியது. மழையிலும் கூட்டம் தொய்வின்றி நடந்தது. நகர கழகத் தலைவர் மு.சோம சுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி.வெ.செந்தில் குமார், நாமக்கல் மாவட்டக் கழகத் தலைவர் மு.சாமிநாதன், மண்டல செயலாளர் கோபி. இளங்கோவன், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். முன்னதாக பிற்பகல் 5 மணியளவில் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழகப் பொறுப்பாளர்களாக கீழ்க் கண்ட தோழர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

தலைவர் - மு.சாமிநாதன் (குமாரபாளையம்), துணைத் தலைவர் - திராவிடமணி (குமாரபாளையம்), செயலாளர் - மா.வைரவேல் (திருச்செங்கோடு), துணைச் செயலாளர் - மோகன் (குமாரபாளையம்). ஆட்டையாம்பட்டி ஒன்றிய அமைப்பாளர் த.சங்கர். திருச்செங்கோடு நகரத் தலைவர் - மு.சோம சுந்தரம், செயலாளர் து.சதீஷ்குமார். குமாரபாளையம் நகரத் தலைவர் மீ.தண்டபாணி, செயலாளர் சி.வெங்கட், துணைச் செயலாளர் செ.வடிவேல், துணைத் தலைவர் சி.ரு. அண்ணாதுரை. மல்ல சமுத்திரம் ஒன்றிய அமைப்பாளர் ந.கண்ணன், ஒன்றிய செயலாளர் சு.பெரியண்ணன்.

**சிவகிரி :** ஆகஸ்டு 10 ஆம் தேதி ஈரோடு மாவட்ட சார்பில் சிவகிரியில் விளக்கக் கூட்டம் பள்ளத்தூர் நாவலரசு இசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. மாவட்ட அமைப் பாளர் செல்வராசு தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் வரவேற்புரையாற்றினார். ஈரோடு மண்டல செயலாளர் கோபி. இளங்கோவன், பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். உரைகளுக்கு இடையே இசை நிகழ்ச்சி நடந்தது. மேடையில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட ஈரோடு கழக இணையர்கள் காவாலாண்டியூர் கிருட்டிணன்-மணிமேகலை பெண் குழந்தைக்கு நிறைமதி என்று கழகத் தலைவர் பெயர் சூட்டினார். பெயர் சூட்டல் மகிழ்வாக இணையர் ரூ.1000 கழகத்துக்கு நன்கொடை வழங்கினர். முன்னதாக சிவகிரி திருமண மண்டபத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெறறது. மாவட்ட பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட தோழர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் - செல்லப்பன் (சென்னிமலை), செயலாளர் - சண்முகபிரியன் (ஈரோடு), பொருளாளர் - சுகுணா (ஈரோடு). அமைப்பாளர்கள் : பா. குமரன் (மறவப்பாளையம்) மற்றும் செல்வராஜ் (சென்னிமலை). ஈரோடு நகரத் தலைவர் - திரு முருகன், துணைத் தலைவர் - சத்யமூர்த்தி, செயலாளர் - சிவானந்தம். சென்னிமலை ஒன்றியத் தலைவர் ரமேஷ் குமார், செயலாளர் அழகன். கொங்கம்பாளையம் கிளைத் தலைவர் சத்யராஜ். சி.எம். நகர் கிளை பொறுப்பாளர் பிரபு. தமிழ்நாடு அறிவியல் மன்றம் மாநில அமைப்பாளர் ப.சிவக்குமார் (ஆசிரியர்), மாவட்ட அமைப்பாளர் மோகன்ராஜ் (ஆசிரியர்). மாவட்ட இளைஞரணி தலைவர் சுப்ரமணி (வைராபாளையம்), பெருமாள் மலை கிளை தலைவர் ராசன்னா.

5ஆம் கட்ட பரப்புரைப் பயணம் கோவை மேட்டுப் பாளையத்தில் ஆகஸ்டு 16இல் தொடங்குகிறது.

**நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 14th August 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஆகஸ்டு 21, 2014 | புரட்சி 13 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...!

+ மயிலை கபாலீசுவரன் கோயிலில் பக்தர்கள் பயன்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட கழிப்பறைகளை கோயில் ஊழியர்கள் மக்களுக்கு அனுமதிக்காமல், தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளனர்.
  
  **– ‘தினத்தந்தி’ செய்தி**

  கோயில் கர்ப்பக்கிரகம் – அர்ச்சகப் பார்ப்பனர் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, கழிப்பறைகளாவது தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கட்டும் என்று முடிவுக்கு வந்துவிட்டார்கள் போல!

+ வேதங்களில் கூறப்படும் ‘சரஸ்வதி’ நதி, பூமிக்கடியில் ஓடிக் கொண் டிருக்கிறதா என்பதை மத்திய நிலத்தடி நீர் வாரியம் கண்டறியும்.
  
  **– அமைச்சர் உமாபாரதி**

  நடிகர் வடிவேலு கிணற்றைக் காணவில்லை என்றுதான் புகார் கொடுத்தார்! உமா பாரதி ஆற்றையே தேடுகிறார்!

+ ‘இராமர்’ பாலத்தை இடிக்காமல், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும்.
  
  **– மத்திய அமைச்சர் கட்காரி**

  இதேபோல, பாபர் மசூதியை இடிக்காம, இராமன் கோயிலைக் கட்டுவோம்னு சொன்னீங்களா?

+ எனக்கே தெரியாமல் என் பெயரில் ‘மேனன்’ பட்டத்தை சேர்த்து விட்டார்கள். என் பெயர், இனி பார்வதிதான்.
  
  **– நடிகை பார்வதி (மேனன்)**

  ஜாதிப் பட்டதைவிட வேண்டும் என்று இளம் நடிகைக்கு இருக்கும் இந்த உணர்வுகூட ‘புரட்சிகர’ இயக்கங்களின் மூத்த தலைவர்களுக்கு இல்லாமல் போய்விட்டதே!

+ என் பேத்தி தியாவுக்கு (நடிகர் சூர்யா குழந்தை) வீட்டுல வச்சு மொட்டைப் போட்டப்ப, அழுத பாப்பாவை முரட்டுத்தனமா தலையை அமுக்கி கதறக் கதற மொட்டை அடிச்சாங்க; மொட்டையடிக்கிற கலாச் சாரத்தை எவன்டா கொண்டு வந்தான்னு? கத்திட்டேன்.
  
  **– ‘ஆனந்தவிகடனில்’ நடிகர் சிவக்குமார்**

  இந்த நியாயமான குமுறலை குடும்பத்துக்கு வந்தால் மட்டும் வெளிப்படுத்தி சமூகத்துக்கு கூறாமல் ஒதுங்குவது நியாயம் தானா, சார்?

# உயர்நீதிமன்றத்தில் வழக்கு: தமிழக அரசு மவுனம்

## சட்டத்தை மீறும் விநாயகன் சிலை ஊர்வலங்கள்

‘விநாயக சதுர்த்தி’ எனும் மதப் பண்டிகை வீடுகளில் நம்பிக்கையாளர்களால் மட்டும் கொண்டாடப்பட்டு வந்த நிலை மாறி, ‘விநாயகன் ஊர்வலம்’ அரசியலாக்கப்பட்டு வருகிறது. இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பை வளர்த்து ‘இந்து’ மதவெறி அரசியலை ஊதிவிடவும் பயன்படுத்தப்படும் ‘விநாயகன்’ சிலை ஊர்வலங்களுக்கு ‘மத உரிமை’ என்ற போர்வையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

‘சுற்றுச் சூழலை’ பாதிக்கும் விதமாக ‘இராசயனக் கலவையில்’ உருவாக்கப்பட்டு கடல் நீரில் கொண்டுபோய் போட்டு நீரை மாசுபடுத்தி, கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஆபத்துகள் உருவாக்கப்படுகின்றன. மாசுக் கட்டுப்பாடு வாரியம், இரசாயன விநாயகன்களுக்கு தடை போட்டுள்ளது. அத்துடன் நகரங்களில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சிலைகள் வைக்கப்படுகின்றன.

பெரியார் இயக்கங்களின் பகுத்தறிவு - அறிவியல் பரப்புரைகளுக்கு தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் போடும் காவல்துறை ‘விநாயகன்’ அரசியலுக்கு சட்டங்களை மீறி உதவிடுவதுதான் வேடிக்கை. இதில் தமிழக அரசும் உடந்தையாகவே செயல்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் டிராபிக் இராமசாமி என்பவர் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதில், உச்சநீதிமன்றத்தில் நடந்துவரும் பொதுநல வழக்கில் தமிழக தலைமைச் செயலாளர் தாக்கல் செய்த பதில் மனுவில் தமிழகத்தின் சாலையோரங்களில் போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் 70 ஆயிரம் கோவில்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்தக் கோவில்களை அகற்ற தலைமைச் செயலாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அண்மைக் காலங்களில் சாலையோரங்களில் சாமி சிலைகளை வைப்பது; போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் பந்தல் அமைப்பது போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சாலையில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக பிள்ளையார் சிலைகளும் வைக்கப்படுகின்றன. இதுபோன்ற சிலைகளை போலீசார் அகற்றுவதற்குப் பதிலாக போலீசாரே இந்த சிலைகளை அமைக்க விதிமுறைகளை உருவாக்கி அறிவிப்பு வெளியிட்டு வருகிறார்கள்.

இவ்வாறு சாலையோரங்களில் பொது மக்களுக்கு இடையூறாக சாமி சிலைகளை வைப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கடந்த 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28 ஆம் தேதியும், செப்டம்பர் 2 ஆம் தேதியும் அரசுக்கு மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இந்த மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என டிராபிக் இராமசாமி அந்த மனுவில் கேட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சதீஷ் குமார், அக்னி ஹோத்ரி, எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த மனுவுக்கு பதிலளிக்கும்படி கடந்த 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால் தமிழக அரசு இதுவரை பதில் அளிக்கவில்லை.

# சாக்கடைக் குழிக்குள் மனிதர்கள் இறங்கும் அவலம்: கழகத் தோழர்கள் போராடி நிறுத்தினர்

சாக்கடைக் குழிக்குள் மனிதர்கள் இறங்கி, சாக்கடை அடைப்பை சுத்தம் செய்யும்போது நச்சு வாயுவில் சிக்கி, தொழிலாளர்கள் மரணமடைவது சென்னையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த இழிவும் ஆபத்தும் நிறைந்த வேலைக்கு மனிதர்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருந்தாலும், சட்ட விரோதமாக ‘தலித்’ தொழிலாளர்கள் இந்த வேலையை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். சென்னை மயிலாப்பூரில் உள்ள சாய்பாபா கோயில் அருகே இதேபோல் சாக்கடைக்குள் இறங்கிய ஜனார்த் என்ற மாநகராட்சி ஊழியர் நச்சு வாயுக்கு 27.8.2013 அன்று பலியானார்.

மீண்டும் அதே பகுதியில் சாய்பாபா கோயிலருகே கடந்த ஆகஸ்டு 16, 2014 அன்று தொழிலாளர்கள் சாக்கடை குழிக்குள் இறக்கப்பட்டனர். செய்தி அறிந்த மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் இராவணன், மாரிமுத்து, மனோகர் உள்ளிட்டோர் அப்பகுதிக்கு விரைந்து சென்று, உயிருக்கு ஆபத்தை உருவாக்கும் இழி தொழிலை உடனே நிறுத்துமாறு கேட்டுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து 124 ஆவது வட்ட மாநகராட்சி அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்த ஊழியர்களிடம் இது குறித்து புகார் செய்தனர். இதற்கிடையே தொழிலாளர் குழிக்குள்ளிருந்து வெளியேறிய நிலையில், ஒப்பந்தக்காரரான மோகன் என்பவர், இரண்டு சிறுமிகளை சாக்கடைக் குழிக்குள் இறக்கினார். இந்தக் கொடுமையை உடனடியாக நிறுத்தாவிட்டால் இதே இடத்தில் போராட்டம் நடத்துவோம் என்று தோழர்கள் எச்சரித்தார்கள். ஒப்பந்தக்காரரர் வேலையை நிறுத்தினார். மாநகராட்சி இதற்கான எந்திரங்களை விலை கொடுத்து வாங்கியும், மனிதர்களையே பயன்படுத்தும் கொடுமை நீடிக்கிறது. ஆங்காங்கே மக்கள் களத்தில் எதிர்த்துப் போராடினால்தான் இந்தக் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

# ‘புலிப்பார்வை’ படவிழாவில் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டனம்

‘லைக்கா’ நிறுவனம் தயாரிக்கும் ‘புலிப் பார்வை’ திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் மாணவர்கள் தாக்கப்பட்டதை திராவிடர் விடுதலைக் கழகம் கண்டிக்கிறது. சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மகன் பாலச்சந்திரனின் மரணம், தமிழ்நாட்டில் மிகப் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. பாலச்சந்திரனை விடுதலைப் புலியாகவே சித்தரித்தும், அவருக்கு புலிகள் சீருடை அணிவித்தும் இப்படத்தில் காட்சிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் மத்திய அமைச்சர் பொன். இராதாகிருட்டிணன், நாம் தமிழர் இயக்கத் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிட்ட பாரிவேந்தர் ஆகியோர் பங்கேற்றனர். சத்யம் தியேட்டரில் நடந்த விழாவின்போது ஈழத் தமிழர்களுக்காக போராடி வரும் மாணவர் அமைப்பினர், விழாவில் இந்தப் படம் குறித்து தங்களுக்கு சில சந்தேகம் இருப்பதாகக் குரல் எழுப்பினர். ஈழத் தமிழர்களுக்கு எதிரான படம் என்று சந்தேகப்படுவதாகக் கூறினர். இதைத் தொடர்ந்து விழாவுக்கு வந்திருந்தவர்கள் மாணவர்களை கொடூரமாகத் தாக்கியுள்ளனர். பலத்த காயமடைந்த மாணவர்கள் மாறன், பிரபாகரன், செம்பியன், கணேசன், கவுதமன், பிரதீப் ஆகியோர் சிகிச்சைக்காக இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தலையங்கம்

## இவர்கள் செய்த குற்றம் என்ன?

மனித உயிர்கள் இங்கே மலிவானவை; அதுவும் ஜாதியில், பொருளாதாரத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களின் உயிர் மதிப்பில்லாதவை.

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் கிராமத்தில் நடந்திருக்கும் நிகழ்வு ‘மனிதம்’ இந்த சமூகத்தில் மரணித்து விட்டதா என்று கேட்கத் தூண்டுகிறது.

இரண்டு நாள்கள் நடக்கும் இசக்கியம்மனின் கோயில் திருவிழாவுக்காக கிராமத்தில் பல ஊர்களிலிருந்தும் குடும்பத்துடன் கூடியிருக்கிறார்கள். முதல் நாள் இரவு, அந்த ஏழை ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் கோயில் மைதானத்திலேயே கழிக்க அவர்களின் குழந்தைகள் அதற்கு அருகே கம்பி வேலி அமைக்கப்பட்ட ஒரு மைதானத்தில் விளையாடப் போய் விட்டார்கள். அங்கே நிறுத்தபட்டிருந்த ஒரு கார், இவர்களின் விளையாட்டுக் கருவியானது.

கார்கள் – இந்தக் குழந்தைகளின் நிஜ வாழ்க்கையோடு நெருங்க முடியாது. அது அவர்களுக்கு கனவுலக குதூகலம். கடனைத் திருப்பித் தராதவரிடமிருந்து ஒரு வங்கி நிர்வாகம் பறிமுதல் செய்து, நிறுத்தி வைத்திருந்த கார் அது. முள் வேலியைத் தாண்டிய நான்கு குழந்தைகள். காரைக் கண்ட மகிழ்ச்சியில் உள்ளே ஏறி அமர்ந்து விளையாடப் போனார்கள். அவ்வளவு தான். குளிரூட்டும் சாதனம் பொருத்தப்பட்ட அந்தக் காரின் தானியங்கி கதவு தானாக மூடிக் கொண்டுவிட்டது. உள்ளே மூச்சுத் திணறிய நான்கு குழந்தைகளும் வெளியே வருவதற்கு அலறினர்; கதவையும் திறக்கத் தெரியவில்லை.

கிராம கோயில் திருவிழாவின் ஒலி பெருக்கி இரைச்சலில் அவர்களின் சத்தமும் கரைந்து போய்விட்டது. குழந்தைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வளர்க்கும் வாழ்க்கை முறைக்கு வந்து சேராத கிராமத்துப் பெற்றோர்கள் அவர்கள். எங்கேயாவது விளையாடிவிட்டு, எப்படியாவது வந்து சேருவார்கள் என்ற வழக்கமான நம்பிக்கையில் இருந்தார்கள். கடைசியில் அந்த மரணச் செய்திதான் அவர்களை வந்து சேர்ந்தது.

தானியங்கிக் கதவுகளுடன் உள்ள அந்த காரை இப்படி பொது மைதானத்தில் மூடாமல் திறந்து போட்ட அதிகாரிகளின் அலட்சியம், இந்த பச்சிளங் குழந்தைகளின் உயிரைப் பறித்துவிட்டது. இது மன்னிக்க முடியாதக் குற்றம். இந்த மக்கள் நம்பும் ‘குலசாமி’யும் இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவில்லை.

மாநகராட்சியின் அலட்சியத்தால் மூடப்படாத பாதாள சாக்கடைக் குழிகள்; மின்வாரிய அலட்சியத்தால் அறுந்து விழுந்து கிடக்கும் கம்பிகளை மிதித்து பலியாகும் உயிர்கள்; இப்படி மனித உயிர்கள் பலியாகிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த மரணங்களைத் தழுவுவது ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து வறுமையில் உழலும் மக்கள் தான்.

ஜாதியம்; உழைப்புச் சுரண்டல்; தன்னம்பிக்கையை தகர்க்கும் மூடநம்பிக்கை; சுயநல வெறி கொண்டு அலையும் அதிகார வர்க்கங்கள் இவற்றையே பண்புகளாக்கிக் கொண்டிருக்கிறது, இந்த சமுதாய அமைப்பு. தங்களின் எதிர்கால நம்பிக்கைகளை இழந்து தவிக்கும் – ஏதுமறியாத – “விதியை நம்பிக் கிடக்கும் இந்த கிராமத்து மக்களுக்கு யார்தான் ஆறுதல் கூறுதல் முடியும்?”

இவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றிட அறிவுக்கான வெளிச்சத்தையும் வாழ்க்கைக்கான நம்பிக்கையையும் ஊட்ட வேண்டாமா? “கும்பிடும் குலசாமிகூட காப்பாற்றவில்லையே” என்று கதறுகிறார், மடிந்து போன ஒரு சிறுவனின் தந்தை.

ஊறிப்போய் கிடக்கும் இந்த மூட நம்பிக்கையிலிருந்து இவர்களை வெளிக் கொண்டு வருவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (7)

# கரந்தை தமிழ்ச் சங்கக் கூட்டத்தின் பின்னணி என்ன?

**‘கண்டதைப் படிப்பவன்’**

***இந்தி எதிர்ப்பைத் தொடங்கியது தமிழ் அறிஞர்கள். பெரியார் பிறகு வந்து இணைந்து கொண்டார் என்று பெ.மணியரசன் எழுதியது சரியா?***

“நமது தமிழ்ப் பண்டிதர் கம்ப ராமாயணத்தில் கருப்பொருள் தேடவும், திருவிளையாடல் புராணத் துக்கு 77 ஆவது உரை எழுதவும், பெரிய புராணத் துக்கு 113 ஆவது உரை எழுதவும் தான் தகுதி யுடையவர்களாகவும் கவலை உடையவர் களாகவும்” உள்ளதைக் கண்டிக்கிறார். “இந்த நாட்டில் உண்மைத் தமிழ் இரத்தம் ஓடும் மக்கள் ஒருவர் இருவராவது இருக்கிறார்களா என்றே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது” என்கிறார், பெரியார்

தோழர் மணியரசன் பெருமிதத்தோடு குறிப்பிடுவதைப்போல, தமிழறிஞர்கள் இந்தி எதிர்ப்புக்கு வழிகாட்டியிருந்தால் இந்தக் கோபம் பெரியாருக்கு எப்படி வந்திருக்க முடியும்?

“ஆகையால், ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் பொதுக் கூட்டம் போட்டு, இந்த சூழ்ச்சியைக் கண்டித்துத் தீர்மானம் போட்டு மேன்மை தங்கிய கவர்னருக்கும், தமிழ் வேளாள மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும், ஆரிய மந்திரி கனம் ஆச்சாரியாருக்கும், பத்திரிகைகளுக்கும் தெரியப் படுத்த வேண்டும்” என்று 22.8.1937 ‘குடிஅரசில்’ தலையங்கமாக எழுதுகிறார்.

அப்படிப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, 27.8.1937 அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்தைத்தான் 10.8.1937இல் இராஜாஜியின் கட்டாய இந்தி எதிர்ப்பு அறிவிப்புக்கு எதிரான முதல் எதிர்வினை என்றும், பெரியார் அதற்குப் பின்னரே இந்தி எதிர்ப்புப் போரில் இணைந்து கொண்டார் என்கிறார்கள் இந்த அறிஞர்கள்! பிறருக்கு ஆலோசனை சொன்னதோடு நிறுத்திக் கொள்ளவில்லை பெரியார். 1.7.1937 முதல் நாளேடாக மாற்றப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த தமது ‘விடுதலை’யில் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த யோசனையை மீண்டும் எடுத்துரைக்கிறார்.

“திருநெல்வேலியிலிருந்து ஒரு ‘ஜாதா’ அதாவது தமிழ் பாஷை அபிமானம் கொண்ட மக்கள் முறையீட்டுக் கூட்டம் ஒன்று தொடங்கி, நேரே சென்னை வரையில் கால்நடையாய் நடந்து, வழியில் ஆங்காங்கு கூட்டம் போட்டு, தீர்மானமும் செய்து மக்களுக்கு இந்திப் புரட்டையும் சூழ்ச்சியையும் விளக்கிக் கொண்டுபோய் சரணாகதி மந்திரிகளுக்குத் தெரிவித்துத் தமிழைக் காப்பாற்றவும், விரோதமான சூழ்ச்சியை அழிக்கவும் முயற்சிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்” என்ற செயல் திட்டத்தையும் முன் வைக்கிறார்.

இராஜாஜி 10.08.1937இல் அறிவித்திருந்தாலும் கட்டாய இந்தி, அடுத்த கல்வியாண்டில், அதாவது 01.06.1938இல் பள்ளிகள் கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிகள் திறக்கப்பட்ட பின்னர்தான் நடைமுறைக்கு வந்தது. 03.06.1938 அன்று சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவரும், இந்தி எதிர்ப்புப் போரின் முதல் சர்வாதிகாரியாக அறிவிக்கப்பட்டவருமான செ.தெ. நாயகம், சண்முகானந்த அடிகள் ஆகியோர் கைது செய்யப்பட்டு இரண்டு மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

சுயமரியாதை இயக்க முன்னோடிகளான ‘நகர தூதன்’ ஆசிரியர் மணவை திருமலைசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மூவலூர் இராமாமிர்தத் தம்மாள், ஐ.குமாரசாமிப் பிள்ளை முதலிய 100 பேர்களைக் கொண்ட இந்தி எதிர்ப்பு கால்நடைப் பிரச்சாரப் படை 01.08.1938 அன்று திருச்சி உறையூரிலிருந்து புறப்பட்டு, 42 நாள்கள், 87 பொதுக் கூட்டங்களை நடத்தி, 928 கிலோ மீட்டர்கள் பயணித்து 11.09.1938 அன்று சென்னையை அடைந்தது. அங்கு நடந்த இந்தி பிரச்சாரப் படையை வரவேற்று சென்னை கடற்கரையில் மறைமலை அடிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்தான் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் முதன் முறையாக பெரியாரால் முன் வைக்கப்பட்டது. நாவலர் சோமசுந்தர பாரதியார் ரெவரண்ட் அருள் தங்கையா, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், பண்டிதை நாராயணி அம்மையார், வ.பா. தாமரைக் கண்ணி அம்மையார், வேலூர் ஷர்புதீன், திருப்பூர் மொய்தீன் போன்ற தலைவர்களும், தமிழறிஞர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இவ் வரவேற்புக் கூட்டத்தில் தமிழறிஞர்கள் இருக்கிறார்களே என்று சிலர் அய்யுறக்கூடும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட ‘குடி அரசு’ தலையங்கத்தின் இறுதிப் பகுதியைப் படித்தால் அந்த அய்யம் தீரும்.

“இந்த சமயம் தமிழ் மக்கள் தூங்கி இருப்பார்களேயானால் தமிழ் மக்கள் பின்னால் உண்மையிலேயே சூத்திரர்களாகவே ஆகிவிட வேண்டி வரும். இதில் காங்கிரஸ், ஜஸ்டிஸ், சுயமரியாதை என்ற பிரிவுகளோ, ஆஸ்திகம், நாஸ்திகம் என்ற உணர்ச்சிகளோ, சைவம், வைணவம் என்கின்ற சமய பேதமோ வேண்டியதில்லை என்பதோடு, ஆரியரல்லாத தமிழ் மக்கள் யாவரும் ஒன்று கூடி முயற்சித்து வேலை செய்ய வேண்டியது அவசியமும் அவசரமுமான காரியம் என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்” என்று முடிக்கும் அந்த தலையங்கத்தின் வழியாக பொது எதிரியாக தமிழ் மக்களுக்கு வருகின்ற இந்தித் திணிப்பை எல்லா வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு எதிர்ப்போம் என்ற அரவணைக்கும் போக்கு பெரியாரிடமும், அழைப்பை ஏற்று இணையும் பெருந்தன்மை ஆஸ்திக, சைவ, காங்கிரஸ் தலைவர்களுக்கும் இருந்துள்ளது. அந்த சிந்தனைப் போக்கு நாம் பெருமையோடு எண்ணவும், பேணிக் காக்கவும், நம் தலைமுறைக்கு விட்டுச் சென்ற ஆழமான பாடமாகவே நாம் கருத வேண்டும்.

(தொடரும்)

## ஆக. 23இல் மேட்டூரில் நாத்திகர் விழா – அறிவியல் பேரணி

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஆக.23 அன்று நாத்திகர் விழா–அறிவியல் பேரணி மேட்டூரில் நடக்கவிருக்கிறது. பிற்பகல் 3 மணியளவில் புதுக்காலனியிலிருந்து அறிவியல் பேரணி புறப்படுகிறது. மேட்டூர் சதுரங்காடியில் சி.கோவிந்தராசு தலைமையில் கருத்து விளக்கக்கூட்டம் நடைபெறுகிறது. ‘எது நாத்திகம்?’ எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், ‘மதமும் மனிதனும்’ எனும் தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும், ‘வாஸ்து–பேய்–பில்லி–சூன்யம்’ மூடநம்பிக்கைளை விளக்கி பரப்புரை செயலாளர் பால் பிரபாகரனும், ‘உலகம் உயிர்கள்–தோற்றம்’ குறித்து வழக்கறிஞர் இரா. திருமூர்த்தியும், ‘சோதிடம்’ குறித்து வழக்கறிஞர் துரை. அருண் ஆகியோரும் கருத்துரையாற்றுகிறார்கள். முன்னதாக பள்ளத்தூர் நாவலரசன் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமரப்பா நன்றி கூறுகிறார்.

## வணிக நிறுவனங்களில் ஜாதிப் பெயரைக் கண்டித்து சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 9.8.2014 சனிக் கிழமை மாலை 3 மணியளவில் ஜாதிப் பெயரை தாங்கி பிடிக்கும். வணிகம் மற்றும் தொழிற்சாலைகளை கண்டித்து, சங்கராபுரம் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அறிவியல் மன்ற அமைப்பாளர் சி.ஆசைத்தம்பி, வே.ராஜேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்க, மாவட்ட செயலாளர் ச.பெரியார் வெங்கட் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் க.இராமர், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் தெள்ளமிழ்து, காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் சு.செங்குட்டுவன், மருதமூர்த்தி, சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, விழுப்புரம் ந.அய்யனார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் தினேஷ், விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் செ.நாவாப்பிள்ளை, சி.சாமிதுரை, சங்கை அன்பு, மா.குமார், சென்னை இளையசிம்மன் உள்பட பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர். மு.நாகராஜ் நன்றி கூறினார்.

# சிங்களக்கூட்டாளி ‘லைக்கா’

***ஈழத் தமிழர் முதலீட்டில் நடக்கும் ‘லைக்கா’ என்ற தொழில் நிறுவனம் இலங்கை அரசுடன் கைகோர்த்து தமிழர்களுக்கு குழிப் பறிக்கிறது. நடிகர் விஜய் கதாநாயகனாக நடிக்கும் ஒரு திரைப்படத்தை தயாரிப்பது வழியாக தமிழ்நாட்டில் தனது மூலதனத்தை முதலிடத் துடிக்கிறது. இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத் தீர்மானத்தையும் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் நசுக்குவதற்கு கொல்லைப்புற வழியாக நுழையும் இந்த நிறுவனத்தின் பின்னணி என்ன?***

***முதலாவது:*** *சிங்கள இனவெறி அரசு நடத்திய காமன் வெல்த் மாநாட்டுக்கு பல மில்லியன் ரூபாய்களை வழங்கியது. அதாவது உலகத் தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் அம்மாநாட்டை புறக்கணிக்கக் கோரி போராட்டங்கள், உண்ணா விரதங்கள் நடத்தி வந்த வேளையில் அதுவும் ஈழத் தழிழர்களாக இருந்துகொண்டு அம்மாநாட்டை பலப்படுத்த அதி உயர்ந்த “கோல் ஸ்பான்சர்” செய்துள்ளது “லைக்கா மொபைல்” நிறுவனம்.*

***இரண்டாவது:*** *பிரித்தானியாவில் உள்ள சிங்கள அரசின் நிதி உதவியுடன் இயங்கும் புத்த பிக்குகள் நடத்தும் புத்த கோவில் சார்பில் நடைபெற்ற சிங்கள சுதத்திரதினத்திற்கு, அதாவது தமிழர்கள் தங்களுடைய கருப்பு நாளாகவும், பிரித்தானியர்கள் சிங்களவர்களிடம் தமிழர்களை அடிமைப்படுத்திய தினமாக கருதும் அந்த சிங்கள சுதந்திர தினத்திற்கு தனித்துவமான ஆதரவு வழங்கி பெரும் பணத்தை வழங்கியுள்ளது “ஈழத் தமிழர் நிறுவனம்” என இப்போது கூறும் சிங்கள கைக்கூலியான “லைக்கா நிறுவனம்”.*

***மூன்றாவது:*** *பிரித்தானியாவில் சென்ற ஆண்டு நடைபெற்ற சிங்கள அணிக்கும் இந்திய அணிக்குமான விளையாட்டுப் போட்டியில் சிங்கள அணிக்கு எதிராக தமிழ் இளையோர்கள் சிறு குழுவாக புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு வந்த சிங்கள அணியின் ஆதரவாளர்கள் தமிழர்களை அடித்து பலத்த காயங்களுக்கு உட்படுத்தினார்கள், சிறு பெண்கள் என்றும் பாராமல் அவர்களையும் எட்டி உதைத்து விரட்டினார்கள். இது எதுவும் அறியாதவர்கள் போல் அடுத்த ஆண்டு அதே மைதானத்தில் நடந்த சிங்களர் அணிக்கும் பிரித்தானிய அணிக்கும் நடைபெற்ற போட்டிக்கு டிக்கட்டுகளை விற்றது மட்டுமல்லாது சிறப்பு சலுகைகளை தனது நிறுவனத்தின் சார்பாக தனது இணையத்திலேயே அறிவித்தது “லைக்கா மொபைல் நிறுவனம்”. லைக்கா டிக்கட் விற்ற அந்த போட்டி நடைபெற்ற போதும் அப்போட்டியை புறக்கணிக்கக் கோரி இளையோர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இப்போது ஈழத்தமிழர் என்று கூறும் “லைக்காவின் அல்லிராஜா” அப்போது ஈழத் தமிழர்களின் போராட்டத்தை கண்டுகொள்ள வில்லை.*

***நான்காவது:*** *சிங்கள பயங்கரவாத அரசின் அதிபர் ராஜபக்சேவின் கட்சியில் எம்.பியாக இருக்கும் “ஜெயசூர்யா”தான் இவர்களின் நேரடி கூட்டாளி. அவரை பிரித்தானியாவில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு அழைத்து வந்தது லைக்கா நிறுவனம். இதே ஜெயசூர்யா முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளை வெற்றி விழாவாக கொண்டாடும் சிங்கள அரசின் ஏற்பாடுகளை இனப்படுகொலைகாரனான கோத்தபயாவுடன் சேர்ந்து நடத்தியவர்களில் ஒருவர் ஆவார். அது மட்டுமல்லாது கோத்தபயாவுடன் சேர்ந்து வெற்றி விழாவில் சிங்கள பயங்கரவாத இராணுவம் வழங்கிய மரியாதையையும் ஏற்றுக்கொண்டவர். ‘முத்தையா முரளிதரனை’ (கிரிக்கெட் விளையாட்டு வீரர்) இனப்படுகொலைக்காரன் இராஜபக்சேவுக்கு ஆதரவாக பேசியதற்காக தமிழ்நாட்டில் நுழைவதற்கு எச்சரிக்கை விடப்பட்டு புறக்கணிக்கப்பட்டார். ஆனால் எமது இனத்தின் சடலங்களில் வெற்றி விழா கொண்டாடும் ஜெயசூர்யாவை தனது முக்கிய கூட்டாளியாக கொண்டுள்ள லைக்கா நிறுவன அதிபர் எப்படி ஒரு ஈழத் தமிழனாக இருக்க முடியும்.*

***ஐந்தாவது:*** *பிரித்தானியாவில் “கார்டிப்” எனும் பகுதியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிக்கு சிங்கள அணிக்கு பஸ் வசதிகளை ஒழுங்கு செய்ததும் இந்த லைக்கா நிறுவனம்தான். அப்போட்டி நடைபெற்ற அவ்விடத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் திரண்டு சிங்கள அணிக்கு எதிராக போராட்டங்கள் நடத்தியதோடு மைதானத்திற்குள் நுழைந்தும் தமிழர்கள் போராட்டங்கள் நடத்தியிருந்தார்கள். ஆனால் இப்போது ஈழத் தமிழர்கள் எனக்கூறும் லைக்கா சிங்களவர்களுடன் நின்றது.*

***ஆறாவது:*** *மகிந்தவுக்கு ஆதரவாக பேசியும் ஆதரவும் அளித்து வரும் முத்தையா முரளிதரனை (கிரிக்கெட் வீரர்) தனது விளம்பரங்களுக்கு ஒப்பந்தம் போட்டு பெரும் தொகையை வழங்கியுள்ளது லைக்கா நிறுவனம். இப்படி தேடித் தேடித் தமிழர்களுக்கு எதிரானவர் களுடன் கூட்டு வைத்து தமிழர்களுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளையும் செய்துவிட்டு இப்பொழுது தானும் ஈழத் தமிழன் என தமிழ்நாட்டு பத்திரிக்கைகளுக்கு தனது ஆதரவாளர்கள் மூலம் பேட்டி கொடுத்து வருகின்றது லைக்கா நிறுவனம்.*

*இதையெல்லாம் மறைப்பதற்கு தாம் இலங்கையிலுள்ள ஈழத் தமிழர்களுக்கு உதவிகள் செய்வதாக தம்பட்டம் அடித்து விளம்பரப்படுத்தி வருகின்றது.தனது இனத்திற்கு உதவிகளை செய்வதை தம்பட்டம் அடித்து அதையும் விளம்பரமாக மாற்றி லாபம் சம்பாதிக்கும் ஈனப்பிறவிகள்தான் இந்த நிறுவனத்தினர். அதுவும் போரில் அனைத்தையும் இழந்து நிற்கும் மக்களுக்கு உதவிகள் செய்துவிட்டு விளம்பரங்கள் தேடுகின்றது லைக்கா. அப்படிப் பார்த்தால் புலம்பெயர் மக்கள் சிலரிடம் கடனாக பணம் பெற்று கொடுஞ்சிறையிலும், சித்திரவதை முள்வேலி முகாம்களிலும் வாடிய தனது உறவுகளை கருணாவுக்கும் ஈழத்தமிழின துரோகி பாண்டிபசார் கொலைக்காரன் “டக்கலசு”க்கும் பணம் கொடுத்து வெளியில் எடுத்தார்கள். அப்படியென்றால் கருணாவும் டக்கலசும் “ஈழத் தமிழர்கள்”தான் அவர்களும் மிகவும் நல்லவர்களா ? இதே வகைதான் லைக்காவும், புலம்பெயர் மக்களிடம் பணம் பெற்று அதை தாயக மக்களிடம் வழங்கிவிட்டு முழுக்க முழுக்கத் தன்னுடைய பணத்தை வழங்கியது போல் விளம்பரம் செய்கின்றது. இப்போது கூறுங்கள் லைக்கா நிறுவனத்தை தமிழகத்தை விட்டு ஓட வைக்க வேண்டுமா இல்லையா?*

*கடந்த ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தீர்மானங்களுள் “சிங்கள இனப்படுகொலை அரசு மீதான பொருளாதார தடை விதிப்பது” என்பதும் ஒன்று.*

*“திட்டமிட்ட இனப்படுகொலை” மூலம் மூன்றரை இலட்சம் ஈழத் தமிழ் உறவுகளை கொன்று குவித்த சிங்கள இனவெறியன் இராஜபக்சேவின் கொடுங்கோல் அரசுக்கு முதுகு எலும்பாக இருந்து பொருளாதார ரீதியாக உதவிக் கொண்டிருப்பது “மற்றுமொரு கருணா”, ”சிங்கள எடுபிடி” அல்லிராஜாவின் “LYCA” நிறுவனம். (சிங்கள பேரினவாத அரசின் குடியரசு-சுதந்திர தின விழாக்களுக்கு பெருமளவு பொருள் உதவி செய்தும், இனவெறியின் ஊற்றுக்கண்ணாக திகழும் சிங்கள புத்தப்பிக்குகளுக்கு சேவகம் செய்தும் “இனப்படு கொலைக்காரன் இராசபக்சே”யின் ஆதரவை பெற்றவர் அல்லிராஜா என்பது குறிப்பிடத்தக்கது.)*

*இலங்கையின் கையாளாக இருக்கும் அல்லிராஜா ஈழத் தமிழர் என்ற போர்வையில் தன்னுடைய “LYCA நிறுவனம்” மூலம் சிங்களத்தின் பொருளாதார அடித்தளமாக தமிழகத்தை மாற்ற திட்டமிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.*

*தமிழகத்தில் பொருளாதாரம் மூலமாக சிங்கள அரசு நுழைந்தால் தன்னுடைய ஆளுமையை மறைமுகமாக செலுத்த முடியும் என நம்பி பல முறை முயன்றது. முயற்சிகள் அனைத்திலும் தோல்வியை தழுவிய நிலையில் சிங்கள அரசு. தற்பொழுது “கத்தி” என்கிற தமிழ்த் திரைப்படம் மூலமாக கனவுத் தொழிற்சாலையான திரையுலகில் காலை பதிக்கத் திட்டமிட்டுள்ளது.*

*தமிழ் ஈழ மாணவர் ஆதரவு கூட்டமைப்பு இந்த அறிக்கையை விடுத்துள்ளது.*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

### கிடைத்தது பிணை

*2002 ஆம் ஆண்டு குஜராத்தில் நரோடியா பாட்டியாவில் 97 முஸ்லிம்கள் படுகொலையில் குற்றம்சாட்டப்பட்டு 28 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர், மோடி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த மாயா கோட்னி. இரண்டு ஆண்டுகாலம்கூட தொடர்ச்சியாக சிறையில் இல்லாத அவரை, இப்போது குஜராத் உயர்நீதிமன்றம், பிணையில் விடுதலை செய்துவிட்டது. ராஜீவ் காந்தி கொலைக் குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டோருக்கு 25 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு பரோல்கூட கிடைக்காது. 97 முஸ்லிம்களை கொலை செய்தவர்கள் என்றால் பிணையில் விடுதலையே கிடைத்து விடும். இதுவே ‘பாரதத்தின் நீதி’!*

### உலகிலேயே...

*உ.பி.யில் பா.ஜ.க. ஓட்டு வங்கியை உருவாக்க மோடியால் கட்சிப் பிரதிநிதியாக அனுப்பி வைக்கப்பட்டவர் அமீத்ஷா! அவர் கட்சிப் பொறுப்பேற்றவுடன் கடந்த ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. 65 பேர் கொல்லப்பட்டனர். 68 பேர் படுகாயமடைந்தனர். இதில் சொந்த வீடு, வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை! சொந்த ஊர் திரும்ப முடியவில்லை. உலக அளவில் மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை – 2013 ஆம் ஆண்டில் உலகிலேயே உ.பி.யில்தான் அதிகம் என்ற அதிர்ச்சியான தகவல் இப்போது வெளி வந்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமெரிக்க நாடாளுமன்றத்தில் சர்வதேச மதச் சுதந்திரம் எனும் தலைப்பில் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கும் அறிக்கையில், 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இத்தகவல் இடம் பெற்றுள்ளது. உ.பி.யில் வெற்றிகளைக் குவிக்க இந்தியாவுக்கு இப்படி ஒரு உலகப் ‘புகழை’ உருவாக்கித் தந்துள்ளது–பா.ஜ.க.*

### ஆர்.எஸ்.எஸ். இரட்டை வேடம்

*காந்தி படுகொலைக்குப் பின் ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அன்றைய உள்துறை அமைச்சர் பட்டேலுடன் ஆர்.எஸ்.எஸ். சமரசம் பேசியதால் தடை நீக்கப்பட்டது. அப்போது ஆர்.எஸ்.எஸ். கலாச்சார இயக்கம்தான் என்றும் அரசியலில் ஈடுபடாது என்றும் அரசுக்கு உறுதி தந்தது. அந்த உறுதிகள், இப்போது காற்றில் பறக்கத் தொடங்கிவிட்டன. பா.ஜ.க.வின் புதிய தலைவராக்கப்பட்டுள்ள மோடிக்கு நெருக்கமான அமீத்ஷா, பா.ஜ.க. நிர்வாகிகள் பட்டியலை வெளியிட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ். முன்னாள் அதிகாரப்பூர்வ பேச்சாளர் ராம்மாதவ் பா.ஜ.க. பொதுச் செயலாளராகவும் மற்றொரு ஆர்எஸ்.எஸ்.காரர் வினய் சகஸ்ரபுதே துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். 8 பொதுச் செயலாளர்களில் 3 பேரும், 11 துணைத் தலைவர்களில் இரண்டு பேரும், மொத்தமுள்ள 4 இணைச் செயலாளர்களும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள். ‘இந்து’ ஏடு (ஆகஸ்டு 17) இத்தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளது. ‘தேசத் தந்தை’ என்று அழைக்கப்பட்ட காந்தி படுகொலையில் தொடர்புடையதாக குற்றம்சாட்டப்பட்டு தடை செய்யப்பட்ட பார்ப்பனிய அமைப்பு வெளிப்படையாக அரசியலுக்கு வந்து நிற்கிறது! பார்ப்பனர்கள் இங்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம்.*

### வாஸ்து பார்க்கிறார்கள்

*சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகத்திலேயே வாஸ்து நுழைந்துவிட்டது! பல்கலைக் கழகத்தின் நடைபாதையும், துணைவேந்தர் பங்களாவும் ரூ.25 இலட்சம் செலவில் ‘வாஸ்து’ப்படி புதுப்பிக்கப்படுகிறதாம். அதுவரை புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள சாமிநாதன் என்பவர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளாராம். துணை வேந்தர் மாளிகைக்குப் போகாமல் விருந்தினர் மாளிகையிலேயே தங்குவாராம். வாழ்நாள் முழுதும் மூடநம்பிக்கைக்கு எதிராக போராடிய பெரியார் பெயரில் அமைந்துள்ள பல்கலையில் இப்படி ஒரு கேவலம்! வாஸ்து பண்டிதர்களையே துணைவேந்தர்களாக்கி விடலாமே!*

DATE OF PUBLICATION 20.08.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## திருப்பூர் கலந்துரையாடலில் ஜாதி மறுப்புத் திருமணம்

# கொட்டும் மழையிலும் கழகக் கூட்டங்கள்!




திருப்பூர் கலந்துரையாடல்




ஜாதி மறுப்புத் திருமணம்

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழகம் முழுதும் நடைபெற்று வரும் தொடர் கூட்டங்களின் 5 ஆம் கட்டப் பரப்புரை ஆகஸ்டு 16 ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் தொடங்கியது. காவல்துறை தடையை நீதிமன்றம் மூலம் தகர்த்து நடந்த இந்தக் கூட்டம் பரபரப்பான சூழ்நிலையில் எழுச்சியுடன் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பா.இராமச் சந்திரன் தலைமை தாங்கினார். சுயமரியாதைக் கலை பண்பாட்டுக் குழுவினர், ஜாதி-அகமணமுறைக்கு எதிராக நடத்திய நாடகம், மக்களை மிகவும் ஈர்த்தது.

தொடர்ந்து ஈரோடு மண்டல செயலாளர் கோபி. இளங்கோ, பொள்ளாச்சி மாவட்டக் கழகத் தலைவர் விஜயராகவன், கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி ஆகியோரைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர்.

கழக இளைஞர்கள் கூட்டத்துக்கு முன்கூட்டியே வந்து கடைக்கடையாக துண்டறிக்கைகளை வழங்கி நன்கொடை திரட்டினர். காவல்துறையினர் தடைப் படுத்தி, தொல்லைகள் செய்தாலும் அவற்றை முறியடித்து பொதுக் கூட்டத்தை தோழர்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். மேடையில் பேசப்பட்ட கருத்துகளை பொதுமக்கள் பாராட்டி வரவேற்றனர்.

### கோவை

17.8.2014 அன்று கோவை புதுசித்தாபுதூரில் மாநகர அமைப்பாளர் தோழியர் இராசாமணி தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்களின் நாடகம்-இசை நிகழ்ச்சிகள் நடந்தன. நாடகம் முடிந்தவுடன் மழை கொட்டத் தொடங்கியது. கொட்டும் மழையிலேயே பொதுக் கூட்டம் நடந்தது. பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமியைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர்.

### திருப்பூர்

ஆகஸ்டு 18 ஆம் தேதி திருப்பூரில் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி இல்லத்தில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜயன் வரவேற்புரையாற்ற, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் தாமரைக்கண்ணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் அடுத்தக் கட்டப் பணிகள் குறித்து விளக்கிப் பேசினர். கழகத் தோழர்கள் கழக வளர்ச்சிக் குறித்து தங்கள் கருத்துகளை முன் வைத்தனர். (நிர்வாகிகள் பட்டியல் அடுத்த இதழில்)

### ஜாதி மறுப்புத் திருமணம்

கழகக் கலந்துரையாடல் கூட்டத்தில் ஜாதி மறுப்புத் திருமணம் ஒன்றும் நடந்தது.

சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியம் தார்க்காடு கிராமம் கோவிந்தன்-சத்யா மகன் இரகுபதி, நீதிபுரம் சுப்ரமணியம்-சாரதா மகள் அனிதா ஆகியோருக்கு ஜாதி மறுப்பு-காதல் திருமணத்தை கழகத் தலைவர், கழகத் தோழர்கள் முன்னிலையில் நடத்தி வைத்தார்.

### பொதுக் கூட்டம்

தொடர்ந்து வீரபாண்டி பிரிவில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு தோழர் குமார் தலைமை தாங்கினார். சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் குழுவினரின் நாடகம், கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து செயலவைத் தலைவர் துரைசாமி, பொருளாளர் இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். மழை கொட்டியது. கூட்டமும் தொடர்ந்து நடந்தது. பொது மக்கள் எதிரே உள்ள ‘பெட்ரோல் பங்க்’ திறந்தவெளியில் நின்றவாறே கருத்துகளைக் கேட்டனர்.

## மாணவர்களுக்கு பெரியார் பிறந்த நாள் கட்டுரைப் போட்டி

ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் பெரியார் 136 ஆவது பிறந்த நாளையொட்டி கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ மாணவியர்கள் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். போட்டிக்கு நேரில் வருகை தரவேண்டும். தன் முகவரியிட்ட 5 ரூபாய் அஞ்சல் உறையை இணைத்து 22.8.2014-க்குள் விண்ணப்பிக்கலாம்.

முதல் பரிசு ரூ.2500, இரண்டாம் பரிசு ரூ.1500, மூன்றாம் பரிசு ரூ.1000 மற்றும் அறிவு நூல்கள்.


செப்.6 மற்றும் 7 தேதிகளில் போட்டி நடக்கும்.

தொடர்புக்கு :
பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை,
19, முருகப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.
பேசி : 044-28522862, 9444804980, 7299441712

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**
கரூர் வைஸ்யா வங்கி
அடையாறு கிளை
‘கரன்ட்’ அக்கவுண்ட்.
எண் :
1257115000002041

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 21st August 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்


திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஆகஸ்டு 28, 2014 | புரட்சி 13 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


## தடை உடைந்தது; திரண்டனர் தோழர்கள்

# மேட்டூரில் நாத்திகர் பேரணி



***ம**ராட்டிய மாநிலத்தில் உள்ளது போல் நாத்திக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டிய தந்தை பெரியார் பிறந்த தமிழகத்திலும் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென மேட்டூரில் சுட்டுக்கொல்லப்பட்ட போராளி தபோல்கர் நினைவாக கழகம் நடத்திய நாத்திகர் விழாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நாத்திகர் விழா மற்றும் மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணி ஆகஸ்ட் 23ம் தேதியன்று மேட்டூர் சதுரங்காடியில் மாலை 5 மணியளவில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

“மராட்டியத்தைப் பின்பற்றி மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டமியற்று” என்ற கோரிக்கையை வலியுறுத்தும் ‘பேனருடன்’ - மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்வுகளுடன் பேரணி புறப்பட்டது.

பேரணியின் துவக்கத்தில்,“பறை சாவுக்கான கலை அல்ல, அது வாழ்வுக்கான கலை; பறை ஒரு ஜாதிக்கான கலை அல்ல, அது ஜாதி ஆதிக்கத்தை அறுக்கவந்த ஆதிக் கலை” என்ற முழக்கத்தோடு சுயமரியாதை கலைபண்பாட்டுக் கழக பல்லடம் தோழர்களும், மேட்டூர் காவிரி கிராஸ் பகுதியைச் சேர்ந்த ஏ.ஆர். குழுவினரும் எழுப்பிய பறை முழக்கம் மேட்டூர் பகுதியை அதிரவைத்தது. தொடர்ந்து தீச்சட்டி தூக்குவது என்பது கடவுளின் சக்தி அல்ல என்பதை வலியுறுத்தும் வகையில் நூற்றுக்கணக்கான கழக தோழியர்கள் தங்கள் கைகளில் தீச்சட்டிகளை ஏந்திக்கொண்டு, “தீச்சட்டி இங்கே, மாரியாத்தாள் எங்கே?” என்ற முழக்கங்களை முழங்கியபடி வந்தனர்.

“கடவுள் உண்டு என்று சொல்லி அலகு குத்தி தேர் இழுக்கும் பக்தனே! கடவுள் இல்லை என்று சொல்லி நாத்திகர்கள் கார் இழுப்பதை பார்த்தாயா?” என்ற முழக்கங்களோடு மேட்டூர் பூவழகன், இளம்பிள்ளை தனசேகரன், மேட்டூர் ஆனந்த், நங்கவள்ளி மாதேஸ்வரன், நங்கவள்ளி சக்திவேல் ஆகியோர் தங்கள் முதுகுகளில் அலகுகுத்தி கார்களை இழுத்து வந்தனர். காவிரி கிராஸ் ரத்தினசாமி திருப்பூர் நகுலன், குட்டிமணி ஆகிய தோழர்கள் தங்கள் கன்னங்களில் நீண்ட வேல்கள் குத்திக்கொண்டு கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை என்று முழக்கம் இட்டனர். கழக தோழர்கள் அரிவாள் மேல் ஏறி நின்று கடவுள் மறுப்பு வாசகங்களை முழங்கியபடி வந்தனர். பல்லடம் மணிகண்டன், காவை அவினாசி ஆகியோர் மண்ணெண்ணெய் மூலம் வாயிலிருந்து தீயை வரவழைத்து சாகசங்களை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து மேட்டூர் முத்துராசு 6 அடி நீளம் 3 அடி அகலம் உள்ள ஆணிப் படுக்கையில் படுத்து வந்தது குழுமியிருந்த பொதுமக்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இளம்பிள்ளை சந்திரசேகரன், நங்கவள்ளி இராஜேந்திரன் ஆகிய தோழர்கள் உயரமான கிரேனில் அலகு குத்தி பறவை காவடியில் தொங்கியவாறு கடவுள் மறுப்பு வாசகங்களை முழக்கமிட்டு வந்தனர்.

### கலக்கியது வீதி நாடகக் குழு

ஊர்வலத்திற்கு முன்பாக சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் கொளத்தூர் குமார் தலைமையில் மின்வாரிய குடியிருப்பு, மாதாகோவில் சிக்னல், காவிரி நகர், சிறிய பூங்கா, மார்கெட், மேட்டூர் பேருந்து நிலையம் ஆகிய 6 இடங்களிலும் நடைபெற்ற வீதி நாடகத்தில் கோபி அர்ச்சுணன், கொளத்தூர் குமரேசன், நங்கவள்ளி கிருஷ்ணன், சேலம் பிரபு, திருப்பூர் பிரசாந்த், திருப்பூர் மணிகண்டன், திருப்பூர் வேணி, திருப்பூர் சங்கீதா, உடுமலை கவிதா, சூலூர் நாராயணமூர்த்தி ஆகியோரின் வீதி நாடகம் பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி முக்கிய கடைவீதிகளை கடந்து நாத்திகர் விழா நடைபெறும் மேட்டூர் சதுரங்காடி திடலுக்கு வந்தது.

திராவிடர் விடுதலைக்கழகத்தின் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி மேட்டூர் நகரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.

(4 ஆம் பக்கம்)

தலையங்கம்

# நாத்திகர் மரபு : நீதிமன்றம் தரும் வெளிச்சம்

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி முடித்த மேட்டூர் நாத்திகர் பேரணிக்கும் வழமைபோல காவல்துறை அனுமதி மறுத்து, உயர்நீதிமன்றத்தின் வழியாக அனுமதி பெற வேண்டியிருந்தது. வினாயகர் சதுர்த்தியை காரணம் காட்டி காவல்துறை கூறிய விளக்கத்தை ஏற்க மறுத்த உயர்நீதிமன்ற நீதிபதி தமது ஆணையில் நாத்திக மரபு குறித்து பதிவு செய்துள்ள கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

> “ஆத்திகம்-நாத்திகம் இரண்டுமே இந்திய மரபில் ஒன்றுக்கொன்று உதவி வந்திருக்கிறது. இரண்டில் எந்த ஒன்றையும் ஒழிக்கவோ, புறந்தள்ளவோ முடியாது. இரண்டு கருத்தியல்களும் ஒன்றை ஒன்று எதிர்த்தாலும், இரண்டுமே சமூகப் பிணைப்பை வலிமைப்படுத்துவதற்கான இழையோட்டத்தை வழங்கியிருக்கிறது. எனவே இதுபோன்ற ஊர்வலங்களும் (நாத்திகப் பேரணி) சமூக செயல்பாடுகளுக்கான பங்களிப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறது”

– என்று நீதிபதி வி.இராம சுப்பிரமணியன் அனுமதிக்கான ஆணையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். சமூக மாற்றத்துக்கு முரண்பாடுகளுக்கிடையிலான போராட்டத்தை கூர்மையடையச் செய்தல் அவசியம் என்ற கண்ணோட்டத்தோடு உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை நாம் வரவேற்கிறோம்.

‘வேதம்’ ஆரிய பார்ப்பனர்களால் திணிக்கப்பட்ட காலத்திலிருந்தே வேத மறுப்பு இயக்கங்களும் தொடர்ந்து நடந்து வந்திருப்பதே சமூக வரலாறு. இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. வேதங்களை எதிர்த்து ‘வைசேஷிகம்’, ‘நியாயம்’, ‘சாங்கியம்’, ‘யோகம்’ போன்ற சிந்தனை மரபுகள் பகுத்தறிவு சிந்தனைகளை முன் வைத்தன. அவர்கள் இயற்கையின் இரகசியங்களை ஆராய்ந்தார்கள், குறிப்பாக ‘சாங்கிய தத்துவம்’ – உலகம் ‘கடவுளால்’ படைக்கப்பட்டது என்ற கருத்தை முழுமையாகப் புறந்தள்ளியது. சாங்கியம் – வலிமையாக முன்வைத்த ‘நாத்திக’ சிந்தனைகளைக் கண்டு அஞ்சிய வேதகாலப் பார்ப்பனர்கள், அந்த சிந்தனைகளைக் கூறு போட்டுப் பிரித்து, ‘வேத’ங்களின் கருத்துகளைத் திணித்து, சாங்கியத்தை வேதாந்தங்களுக்குள் முடக்கி விட்டதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

“கருத்து முதல் வாதம்-பொருள் முதல் வாதம்” என்ற அடிப்படையிலேயே வேதப் பார்ப்பனர்களுக்கும் அதை எதிர்த்த நாத்திக மரபினருக்கும் வாதங்கள் நடந்துள்ளன. ‘உலகாயதம்’ என்ற கோட்பாட்டை முன் வைத்த ‘சார்வாகம்’, கடவுள், மறுபிறப்பு ஆகியவற்றை மறுத்ததோடு, வாழ்க்கை வாழ்வதற்குத்தான்; துறப்பதற்கு அல்ல; அனுபவமும், அறிவுமே, வாழ்க்கைக்கான வழிகாட்டிகள் என்ற கருத்துகளையே முன் வைத்தது என்று கூறுகிறார், தத்துவ சிந்தனையாளர் இராகுல் சாங்கிருத்யாயன். ஆனால், இந்த நாத்திக சிந்தனைகளின் மூல நூல்கள் முற்றாக அழிக்கப்பட்டதால் அதற்கு மறுப்புரைகளாக வெளிவந்த பார்ப்பனர்களின் வடமொழி நூல்களிலிருந்து தான் அக்கருத்துகளைத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது.

மத்துவர் எழுதிய ‘சர்வதரிசன சங்கிரகம்’, ‘ஹரிபத்திர ஆரி’ எழுதிய ‘சுதா தரிசன சமுக்கியம்’ என்று ஏராளமான சார்வாக எதிர்ப்பு நூல்களை வேதங்களை நியாயப்படுத்திய பார்ப்பனர்கள் எழுதிக் குவித்தார்கள். அந்த மறுப்புகளுக்குள்ளேதான் ‘சார்வாச’ சிந்தனைகள் மூழ்கிக் கிடந்தன.

பார்ப்பன வேத மரபு வலியுறுத்திய ‘உயிர்ப்பலி’யை எதிர்த்த சமணம், கடவுளையும் எதிர்த்தது. உலகமே படைக்கப்பட்டதல்ல என்கிறபோது எப்படி உலகத்துக்கு ஒரு படைப்பவன் இருக்க முடியும்? என்று கேட்டதுதான் சமணம்.

கடவுள்தான் மூலம் (Cause), உலகம் – அதன் விளைவு (effect) என்ற வாதத்தை மறுத்த சமணம், விளைவுகள் நிரந்தரமானவையாக இருக்க முடியாது. அது சில காலம் இருக்கலாம், சில காலம் இல்லாமலும் போகலாம்; ஆனால், உலகம் நிரந்தரமாக இருக்கும்போது, அது எப்படி ‘விளைவாக’ இருக்க முடியும்? என்ற கேள்வியை எழுப்பியது.

ஆரியப் பார்ப்பன வேதங்களுக்கு எதிராக வீடுகளை துறந்து வெளியேறி மக்களை சந்தித்து, அதன் கேடுகளை எடுத்துச் சொன்னவர்களும் உண்டு. ‘நாடோடி’களாக வாழ்ந்த அவர்கள், ‘பரிவிராஜகர்கள்’ என்று அழைக்கப்பட்டனர்.

அதேபோல், வேத பார்ப்பனியத்துக்கு எதிராக எழுந்த பவுத்தம், மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. கடவுளைப் பற்றி புத்தர் பேசவில்லை. புத்த மார்க்கம் எந்தக் கடவுளையும் முன்னிறுத்தவும் இல்லை. வேத மரபு வலியுறுத்திய ‘பிரம்மம்’ என்ற கருத்து அறிவுபூர்வமானது அல்ல என்று புத்தர் மறுத்தார். மூன்று வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள் ‘பிரம்ம’த்தை நேரில் கண்டிருக்கிறார்களா? ‘பிரம்மத்தை’ நேரில் அறியாதவர்கள், அதை அடைவதற்கான நெறிமுறைகள் மட்டும் தங்களுக்குத் தெரியும் என்று கூறுவது அறியாமையல்லவா? என்று பார்ப்பனர்களை நோக்கி கேட்டார். வேத கேள்வி சடங்குகளை நிறுத்த மக்களை திரட்டினார். ஆனாலும் அவருக்குப் பிறகு புத்த மார்க்கத்திலும் பார்ப்பனியம் நுழைந்தது. புத்தரின் உண்மையான ‘வேத மறுப்பு’ சிந்தனைகளை சிதைத்தது. இப்படி பார்ப்பன வேதங்களுக்கு எதிராக வரலாறு நெடுக இயக்கங்களும் சிந்தனைகளும் பீறிட்டுக் கிளம்பின.

இந்த சிந்தனை மரபுகள் ‘இந்து’ மதத்தின் ஒரு அங்கமாக சித்தரிக்கப்படுவதும்கூட வரலாற்றுப் பிழை. ‘இந்து மதம்’ என்று பெயர் சூட்டப்பட்டதே பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்தான். இதை காஞ்சி மூத்த சங்கராச்சாரியே ஒப்புக் கொள்கிறார்.

பார்ப்பன வேதங்களுக்கு எதிரான இயக்கங்கள் – சிந்தனைகள் வரலாறு நெடுக வேதியக் கூட்டத்தின் ஊடுவலாலும் கருத்துச் சிதைப்பாலும் வன்முறையாலும் வீழ்த்தப்பட்டது. அந்த வரலாற்றை முறியடித்து “கடவுள் இல்லை; இல்லவே இல்லை; கடவுளை கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி” என்ற உச்சகட்ட எல்லைக்கு நாத்திக-வேத எதிர்ப்பு மரபைக் கொண்டு வந்து நிறுத்திய ஒரே வரலாற்று நாயகர் பெரியார்தான். பெரியார் தொடங்கிய இயக்கம்தான் வேத மரபின் ஆணிவேரை அசைத்தது.

அதுமட்டுமல்ல, வேத எதிர்ப்பு நாத்திகத்தை மக்கள் இயக்கமாக்கி, அவை, ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களுக்கு மறுத்த உரிமைகளை மீட்டெடுக்கும் போரில் பெரும் பெற்றி கண்ட ஒரே தலைவரும் பெரியார்தான்.

இந்த மண்ணில் தோன்றிய புத்த மார்க்கத்தை இந்த மண்ணிலிருந்தே துடைத்து அழிப்பதில் வெற்றி கண்ட பார்ப்பனியம் பெரியாரியத்திடம் மட்டுமே பலத்த அடி வாங்கியது.

அந்த வரலாற்றுப் போராட்டம் தொடருகிறது. இந்த முரண்பாடுகளைக் கூர் தீட்டி, வேத பார்ப்பனிய கட்டமைப்புகளின் வீழ்ச்சியை நோக்கி மக்களை அணி திரட்டுவதே நமக்கான நாத்திக மரபு. அதுவே நாம் நடத்தும் நாத்திகர் விழாக்கள்.

காவல் துறை அலுவலகத்தில் ஊதியம் வாங்கும் சில நபர்களுக்கு இந்த கருத்துகளின் வலிமை புரியாது.

நீதிமன்றம் தந்த தீர்ப்புகளாவது இவர்களின் கண்களைத் திறக்கட்டும்!

## செங்கொடிக்கு வீரவணக்கம்!

தாயே! எங்கள் தமிழன்னைச் செல்வமே!
தமையரின் உயிர்காக்கச் செந்தீயில் வீழ்ந்தாயே!
ஓயாது கண்ணீரில் ஆழும் எம்மைச்
சாயாது காக்கத் தீவாயில் சாய்ந்தாயே!
காயாத கண்ணீரைக் காலமும் விடுத்தாயே!
கல்லும் கரைந்ததே கண்மணியே! மகளே!
தீயான உன்னுயிர் தமிழர்க்கு உயிராகி
இயக்கும் இனத்தைக் காக்கும் அம்மா!

**– குயில் தாசன்**

## வினாக்கள்... விடைகள்...!

+ இந்து ஆலயங்கள், திருமடங்களுக்கு தமிழக அரசும் காவல் துறையும் கூடுதல் பாதுகாப்பு அளிக்க வேண்டும். **– இராமகோபாலன்**

அப்படின்னா, மத பிரச்சினைகளில் ஆட்சி தலையிடக் கூடாதுன்னு சொல்வீங்களே... அந்தக் கொள்கையை கை விட்டாச்சா?

+ பெண்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையை ஏற்படுத்த வேண்டும். **– மருத்துவர் இராமதாசு**

ஒரு சந்தேகம்.... ஜாதி மாறி திருமணம் செய்யும் பெண்களுக்கும் இது பொருந்துங் களா?

+ சங்கர்ராமன் கொலை வழக்கு: விடுதலையான ஜெயேந்திரனை எதிர்த்து மேல் முறை யீடு இல்லை. **– மத்திய அரசு வழக்கறிஞர்**

அரும்பாடுபட்டு சுவாமிகள் சங்கர்ராமனை ‘மேல் உலகம்’ அனுப்பியிருக்காரு; இதைப் பாராட்டாமல் மேல்முறையீடு செய்வது ‘அதர்மம்’!

+ சட்ட விரோதமாக நிலக்கரி சுரங்கங்களை முந்தைய பா.ஜ.க. ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி இரண்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. **– உச்ச நீதிமன்றம்**

அப்பாடா... இனிவரும் நாடாளு மன்றக் கூட்டத் தொடரில் அமளிகள், மைக் உடைப்புகள், ஒத்தி வைப்புகள் எதுவுமே இருக்காது!

+ விநாயகன் சிலைகளை நிறுவுதில் விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை. **– காவல்துறை எச்சரிக்கை**

ஆமாம! தெருவில் நிற்கும் விநாயகன்கள் ஆகம விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல; காவல்துறை விதிகளுக்குத்தான் அடங்கி நடக்க வேண்டும்.

+ தமிழ்நாட்டில் 37,032 அரசு பள்ளிகளில் 7837 பள்ளிகளில் கழிப்பறை வசதியே கிடையாது. **– செய்தி**

என்னது...? அப்படின்னா வாஸ்து சாஸ்திரப்படி செயல் படுவது இந்த 7837 பள்ளிகள் மட்டும் தானா?

+ ராமன் கோயில் பிரச்சினையை அடுத்த மாதம் கிளப்புவோம். **– விசுவ இந்து பரீஷத்**

எதுக்கு பிரச்சினை கிளப் பனும்? ‘ஸ்ரீ ராமஜெயம்’ எழுதி கிட்டே இருங்க! ‘ஜெயம்’ ராமனுக்குத் தான்!

## நெகிழ வைத்த ஒரு தோழரின் நன்கொடை



காவாலாண்டியூரில் துப்புறவுத் தொழிலாளியாக அண்மையில் பணியில் சேர்ந்தவர் கழகத் தோழர் பச்சையப்பன். மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக அவருக்கு கிடைப்பது ரூ.2000 மட்டுமே. தனக்கு முதல் மாதமாகக் கிடைத்த தொகுப்பூதியத் தொகை ரூ.2000-த்தையும் கழக வளர்ச்சிக்காக கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கிய நிகழ்வு கூட்டத்தினரை நெகிழ வைத்தது. பலத்த கர வொலி செய்து தோழர்கள் வரவேற்றனர்.

# குலுங்கியது மேட்டூர்
































மேலும் பேரணி
காட்சிகளை
திராவிடர் விடுதலைக் கழக
முகநூலில் காணலாம்

DATE OF PUBLICATION 27.08.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வருக: நாத்திகர் பேரணி தீர்மானங்கள்

***23.8.2014 சனிக்கிழமை மேட்டூர் சதுரங்காடியில் கழகத்தின் சார்பாக நடைபெற்ற 'நாத்திகர் விழா' பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:***

- 1989 முதல் மராட்டிய மூட நம்பிக்கை ஒழிப்புச் சங்கத்தை நிறுவி நடத்தி வந்தவரும், மூட நம்பிக்கை ஒழிப்புப் போராளியுமான நரேந்திர தபோல்கர் முதலாமாண்டு நினைவு நாள் 20.08.2014 ஆகும். கடந்த ஆண்டு அவர் இறந்த சில நாள்களில் 24.08.2014 அன்று மராட்டிய மாநில ஆளுநர் - பேயோட்டுதல், மந்திரவாதிகளின் செயல்கள், தேள், பாம்பு கடிக்கு பாடம் போடுதல், குட்டிச்சாத்தான், குறளி வித்தை போன்றவற்றை தடைசெய்யும் மூடநம்பிக்கை ஒழிப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தும் அதைத் தொடர்ந்து 14.12.2013 அன்று மராட்டிய சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் ஒப்புதலுடன் 18.12.2013 அன்று சட்டமாக்கப்பட்டது.

  தமிழகத்திலோ 1925 முதல் சுயமரியாதை இயக்கத்தை நிறுவி, 1973 டிசம்பர் இறுதி வரை சுற்றிச் சுழன்று, மூட நம்பிக்கைகளுக்கு எதிராக வீச்சான போராட்டத்தை நடத்ஃதி வந்த பெரியார் மறைந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக கடந்துவிட்ட நிலையிலும் தமிழகத்தில் அவ்வாறான ஒரு சட்டம் நிறவேற்றப்படாமல் உள்ளது அனைவருக்கும் வருத்தமளிக்கக்கூடிய ஒன்றாகும்.

  எனவே, நீண்ட பகுத்தறிவு வரலாறு கொண்ட தமிழகத்தில் உடனடியாக மராட்டிய மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டதை ஒத்த மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசை இப்பொதுக் கூட்டம் வலியுறுத்துகிறது.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கடமைகளைக் கூறும் 51ஏ பிரிவின் (ஜி) உட்பிரிவின்படியும், சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும், தமிழக அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் அறிவிக்கைகளின்படியும், நீர்நிலைகளில் இரசாயன வண்ணம் பூசப்பட்ட சிலைகளையும், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், சுட்ட களிமண் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிலைகளையும் கரைப்பதற்குத் தடை விதித்தும், கடற்கரை, ஆற்றங்கரை, குளக்கரை ஆகயவற்றின் ஓரத்தில் அன்றி, படகு மூலமாக உள்பகுதிக்குச் சென்றே கரைக்க வேண்டுமென்றும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளன.

  இவ்வாண்டு, விநாயகர் சிலைக் கரைக்கும் இடங்களில் ஒன்றாக மேட்டூர் காவேரி பாலமும் சேலம் மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 12 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் பல இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்திற்கு பாசன ஆதாரமாகவும் உள்ள காவேரி ஆறு மாசுபடாமல் காக்க வேண்டியது நம் அனைவரின் அறவியல் கடமையாகும்.

  திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும், சுற்றுச் சூழல் ஆர்வலர்களும், விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும் மேட்டூர் காவேரி பாலத்தில் இரசாயன வண்ணம் பூசப்பட்ட சிலைகளோ, பிளாஸ்டர் ஆப் பாரிஸ், சுட்ட களிமண் ஆகியவற்றில் செய்யப்பட்ட சிலைகளோ கரைக்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, அவ்வாறு நிகழுமாயின், வருவாய்த் துறை, காவல் துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியோரின் துணையோடு தடுப்பதெனவும் முடிவெடுத்துள்ளோம்.

  இம்முயற்சிக்கு அனைத்து அரசியல் கட்சிகளும், மக்கள் இயக்கங்களும், அமைப்புகளும், பொது மக்களும் காவேரி பாலம் அருகே திரண்டு வந்து ஆதரவு கொடுக்க வேண்டுமாறு இப்பொதுக்கூட்டம் அறைகூவல் விடுக்கிறது.

- இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை எவ்வித ஒலிபெருக்கிகளும் இயக்கப்படுவதோ, மேளம், பறை வாத்தியங்கள் இசைக்கப்படுவதோ - படிக்கும் மாணவர்களுக்கும், நோயாளிகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும், கடும் வேலைகளில் ஈடுபட்டு வந்தபின் ஓய்வெடுக்கும் உழைப்பாளர்களுக்கும் உரிமையான நிம்மதியான ஓய்வைக் குலைக்கும் செயல்களாகும் என உயர்நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றமும் பலமுறை தீர்ப்பளித்திருக்கின்றன.

  அதுபோலவே, பிற நேரங்களிலும், பள்ளி, மருத்துவமனை, குடியிருப்பு, வணிக நிலையங்கள் உள்ள பகுதிகளில் இவ்வளவுதான் ஒலி அளவு இருத்தல் வேண்டுமென விதிகளும் தெளிவாக உள்ளன.

  இவ்வாறாக எந்த ஒரு காரணத்துக்கும் ஒலி பெருக்கி அமைக்க காவல்துறையின் உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெறுவதும் சட்டப்படியான ஒன்றாகும்.

  ஆனால், நமது மேட்டூர் பகுதிகளிலும், தமிழ்நாட்டில் பரவலாகவும், குழந்தைகள், நோயாளிகள், மாணவர்கள், உழைப்பாளர்கள், வணிகர்கள் என அனைத்து தரப்பினருக்கும் பெரும் இடையூறாகவும், மனஉளைச்சலை ஏற்படுத்தும் வகையிலும் அமைதி நேரமான இரவு 10-காலை 6 வரை எவ்வித அனுமதியுமின்றி ஒலிபெருக்கிகளை அலற விடுவதும், மேளங்களை ஒலிப்பதும், மற்ற நேரங்களிலும் அளவுக்கு அதிகமான ஒலி வைத்தும் எவ்வித வரைமுறையுமின்றி நடந்து வருகின்றன.

  அதிலும் குறிப்பாக அரையாண்டு தேர்வுகள் நடைபெறும்போது அய்யப்பன் விரதம் என்ற பேராலும் முழு ஆண்டு தேர்வுகள் நடைபெறும்போது மாரியம்மன்/காளியம்மன் பண்டிகைகளின் பேரிலும் இரவு பகல் என்ற வேறுபாடு இல்லாமல் நாள் முழுதும் ஒலிபெருக்கிகள் உச்சபட்ச ஒலியில் அலறுவது மிகச் சாதாரண நடைமுறையாக இருந்து வருகிறது.

  அதுபோலவே பல விழாக்களின் தொடர்பாக ஆற்றுக்கு நீரெடுக்கப் போகிறோம் என்றும் மாவிளக்கு ஊர்வலம் என்றும் எவ்வித சட்டப்பூர்வ அனுமதியும் இல்லாமல், பேருந்து வழித்தட முதன்மைச் சாலைகளை மணிக்கணக்கில் அடைத்துக் கொண்டு ஊர்வலம் செல்வதும் மிகச் சாதாரணமாக அங்கிங்கெனாதபடி எங்கும் நடைபெறுகிறது. அவசர சிகிச்சைக்காக மருத்துவமனை செல்ல முடியாமல் உயிரிழந்த செய்திகளும் உண்டு.

  இனிமேலாவது இவ்வாறான சட்ட விரோத ஒலிபெருக்கி, மேளங்களையும் தடுத்து நிறுத்துமாறும், சட்ட விரோத ஊர்வலங்களை முறைப்படுத்துமாறும் காவல்துறையினரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. மீறி நடக்குமாயின் முதல் ஓரிருமுறை உரிய காவல் நிலையத்தில் தகவல் கொடுத்து நிறுத்த முயலுமாறும், பிறகும் தொடருமாயின் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகளையும், சட்ட விதிகளையும் நடைமுறைபடுத்த வேண்டிய நல்ல குடிமக்களின் கடமை உணர்வோடு, அவற்றை தடுத்து நிறுத்த நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும கழகத் தோழர்களையும் பொது மக்களையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணியளவில் மேட்டூர் சதுரங் காடியில் மறைந்த சேலம் மேற்கு மாவட்ட பொருளாளர் தோழர் மேட்டூர் இரா.பெ. ஆசைத் தம்பி நினைவு மேடையில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு தலைமையில் நாத்திகர் விழா தொடங்கியது. மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் வரவேற்றார். துவக்கத்தில் பள்ளத்தூர் நாவலரசன், கோவை இசைமதி குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழக மாவட்டச் செயலாளர் கொவிந்தராசு தனது தலையையும் கால் பாதத்தையும் மட்டுமே இரு நாற்காலிகளில் வைத்துக் கொண்டு படுத்திருக்க அவரது இடுப்புப் பகுதியில் 95 கிலோ எடை கொண்ட தூத்துக்குடி இரவி ஏறி நின்று காட்டினார்.

சாமியார்களின் மோசடிகளை தோல் உரித்துக் காட்டும் வகையில் பெரம்பலூர் மாவட்ட கழகத் தலைவர் துரை. தாமோதரன் "மந்திரமல்ல தந்திரமே" என்ற நிகழ்ச்சியை நடத்தினார். அதில் மேசை அந்தரத்தில் பறப்பது, நீர் ஊற்றிக் கொண்டிருக்கும் போது குவளை அந்தரத்தில் மிதப்பது, உடைத்துப் போடப்பட்ட கண்ணாடி துண்டுகள் மேலேறி மிதிப்பது, குதிப்பது போன்றவை பார்வையாளர்களை நாற்காலியின் நுனியில் உட்காரச் செய்தது.

சேலம் மண்டல அமைப்பு செயலாளர் சக்திவேல்-அனிதா ஆகியோரின் மகன் பெரியாரிய விழுது இளமகன் பெரியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன் குறித்து சிற்றுரையாற்றினார். தொடர்ந்து, சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் துரை.அருண் சோதிடம் என்ற தலைப்பிலும், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் இரா. திருமூர்த்தி உலகம்-உயிர்கள்-தோற்றம் என்ற தலைப்பிலும், கழகப்பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால்பிரபாகரன் வாஸ்து-பேய்-பில்லி சூன்யம் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

சுயமரியாதை கலைபண்பாட்டுக் கழக வீதிநாடகத் தோழர் கொளத்தூர் குமரேசன்-பகவதி இணையரின் ஆண் குழந்தைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பலத்த கரவொலிக்கு இடையே 'அறிவன்' எனப் பெயர் சூட்டினார்.

"மதமும் மனிதனும்" என்கிற தலைப்பில் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், "எது நாத்திகம்?" என்கிற தலைப்பில் கழக தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியில் சேலம் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.குமரப்பா நன்றி கூறினார்.

நாத்திகர் விழாவில், கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மாநில அமைப்புச் செயலாளர் திண்டுக்கல் தாமரைக் கண்ணன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஈரோடு சிவக்குமார், ஈரோடு மண்டல அமைப்பு செயலாளர் கோபி இராம. இளங்கோவன், திருச்சி மண்டல அமைப்பு செயலாளர் புதியவன் உள்பட பல்வேறு பொறுப்பாளர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். கோவை, திருச்சி, திருப்பூர், ஈரோடு, பல்லடம், குமாரபாளையம், திருச்செங்கோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

காவல் துறையினரின் இடையூறுக்கு இடையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதி பெற்று மேட்டூரில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியும், நாத்திகர் விழாவும் கழக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும் என்பது உறுதி. சேலம் மேற்கு மாவட்டத் தோழர்கள் மேட்டூர் நகரம் முழுவதும் கழக கொடிகளையும், கழகக் கொடித் தோரணங்களையும் கட்டியும், நாத்திகர் விழா விளம்பர பதாகைகள் அமைத்தும் விழாவிற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

**செய்தி : மன்னை இரா. காளிதாசு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 28th August 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN